# யாழ். - கொழும்பு விமானத்தில் இடமில்லை

## 13-ம் திகதி வரைசகல ஆசனங்களும் பதிவு

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்

டொலர் கோர்ப்பரேஷன்

ஈழநாடு
THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலர் 11
இதழ்: 297
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் கார்த்திகை 22 நம்ழான் 26 ஞாயிற்றுக்கிழமை [7-12-69]

அண்ணா கோப்பி
இலவசம்
1/4 றுத்தல்

ஐந்து பிளாஸ்ரிக் வெற்றுக் கப்புகளுக்கும் ஒரு பிளாஸ்ரிக் கப் அண்ணா கோப்பி இலவசமாக வழங்கப்படும். அண்ணா கோப்பி வேண்டி பணத்தை மிச்சப் படுத்துவதற்காக இன்று முதல் அண்ணா அடையாளமுள்ள பிளாஸ்ரிக் கப்புகளைச் சேகரிக்க ஆரம்பியுங்கள்!

### ரயில் வேலை நிறுத்த எதிரொலி

யாழ்ப்பாணம், ஞாயிறு

சரக்கு வண்டிகளை தவிர வேறு எந்த வண்டிகளும் நேற்று ஓடவில்லையென்றும் இன்றும் இதே நிலைமைதானிருக்குமென்றும் யாழ்ப்பாணம் புகையிரத பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புகையிரத சேவை ஸ்தம்பித்ததைத்தொடர்ந்து பஸ் பிரயாணிகள் அதிகரித்துள்ளன ரென்றும் பஸ் தரிப்பு நிலையங்களில் பிரயாணிகள் நீண்டநேரம் காத்திருப்பதாகவும், இலங்கை பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. சி. எம். எஸ். நாதன் நேற்றுத் தெரிவித்தார்.

வடபகுதியில் குறிப்பாக இரட்டைத்தட்டு பஸ்கள் பழுதடைவதாகவும், புகையிரத பகுதியினர் வேலை நிறுத்தத்தின் காரணமாக மேலதிக பஸ்களை வடபகுதிக்கு அனுப்பும்படி அவர் இ. போ. ச. தலைவரிடம் கோரியுள்ளார்.

வடபகுதிக்கு மேலதிக பஸ் எதுவும் அனுப்பப்படவில்லையென்றும் வழக்கமான சேவைகள் மட்டுமே நடைபெற்று வருவதாகவும் இ. போ. ச. வடபிராந்திய முகாமையாளர் திரு. வேலுப்பிள்ளை நேற்று தெரிவித்தார்.

பஸ் தொழிலாளர்கள் பிரயாணிகளுக்காக கடுமையாக உழைத்து வருகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார். இப்படியான சமயத்தில் பஸ் தொழிலாளர் பூரண ஒத்துழைப்பு வழங்குவது பாராட்டுக்குரியது என்றும் அவர் கூறினர்.

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்குமிடையில் விமான சேவை இம்மாதம் 13-ம் தேதி வரை ஆசனங்கள் பதிவுசெய்யப்பட்டிருப்பதாக எயர் சிலோன் காரியாலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தினமும் பிரயாணிகள் நேரிலும், தொலைபேசியிலும் ஆசனங்கள் பதிவுசெய்து வருவதாகவும் மேலதிக சேவை எதுவும் ஒழுங்கு செய்யப்படவில்லையென்றும் அவர் கூறினர்.

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் தினமும் 1 விமான சேவையும் சனிக்கிழமை மட்டும் 2 விமான சேவையும் நடைபெற்று வருகிறது.

புகையிரத பகுதியை சேர்ந்த காட்மார் சங்கமும், சாரதிகள் சங்கமும் கடந்த 6 தினங்களாகவேலை நிறுத்தம் செய்துவருகின்றது.

# ஆட்சி மன்றத்துக்கு பட்டதாரி மாணவர் படையெடுப்பு

## வெளியே நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்

### உதவிமந்திரியைச் சந்தித்தபின்திரும்பினர்

கொழும்பு, சனி

**கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று காலை ஆட்சிமன்றக் கட்டட வாசலுக்குள் (சபைக்குள் அல்ல)பிரவேசித்து பெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர்**

சுமார் 800 மாணவ, மாணவிகள் இங்கு கூடி கட்டடம் அதிரும்படி பலத்த கோஷங்களை எழுப்பினர்; நடனம் ஆடினுர்கள்; பாடினுர்கள்

தாங்கள் கூட்டம் நடத்துவதற்கு வேறிடத்தில் அனுமதிக்காத காரணத்தினுலேயே தந்திரமாக ஆட்சிமன்ற நுழை வாசலுக்குள் புகுந்து கூட்டம் நடாத்துவதாகப் பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் திரு. கே. கே. வைமன் [illegible]திருந்த மேசை ஒன்றின்மீது ஏறி நின்று உரையாற்றுகையில் கூறினர்.

சங்கத்தின் காரியதரிசி திரு. பி. யோகரத்தினுவும் மேசை மீது நின்றுகொண்டு உணர்ச்சி வசப்பட்டு உரையாற்றினர்.

"இம்முறை வாசலுக்குள் நுழைந்[illegible] இனி சபைக்குள்ளேயே நுழைந்து கூட்டம் நடத்[illegible] கூறினர்கள்.

ஐந்தாறு பேர்களாக ஆட்சி[illegible] வாசலுக்கு இந்தமாணவர்கள் பொலி[illegible]ருக்குத் [illegible]

### '1960க்கு பிறகேதமிழர் கஷ்டத்தை அனுபவித்தனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழரசு கட்சி கடந்த 14 வருடகாலமாக தமிழ் பேசும் மக்களை தவரான பாதையில் வழிநடத்தி வந்திருக்கிறது. யூ. என். பி. கட்சியிடமும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிடமும், தமிழரசு கட்சியினர் நம்பிக்கையிழந்து விட்டனர். அடுத்த தேர்தலிலும் அவர்கள் பெரும் பலத்துடன் தெரிவு செய்யப்பட்டாலும் ஆட்சி மன்றத்தில் அவர்கள் எதையும் சாதித்து விடமுடியாது.

மந்துவிலில் நேற்று நடந்த தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் முன்னுள் எம். பி. திரு. வி. குமாரசாமி பேசும் போது மேற்கண்டவாறு கூறினர்.

திரு இ. செல்லையா தலை[illegible] நடவடிக்கை காரணமாகத்தான் வாலிபர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் என்றுமில்லாத அளகுகவு தலைதூககியுள்ளது.

1960-ம் ஆண்டு தமிழரசு கட்சியினர் யூ என். பி அரசாங்கத்தை ஆதரித்திருந்தால் வாலிபர்களில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒரளவு குறைந்திருக்கும். தமிழரசு கட்சி, சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து 1960-ம் ஆண்டு யூ. என் பி. அரசாங்கத்தை வீழ்த்தியது. பின்னர் 5 வருடம் கழித்து 1965-ம் ஆண்டு யூ என் பியை ஆதரித்தது. 1960-ம் ஆண்டு தமிழரசு கட்சி யூ என் பி அரசாங்கத்தை வீழ்த்த ஒத்துழைத்தது பெரிய தவருகும். 1960-ம்

### அரசாங்கத்திடம் கையளிப்பு

அனலைதீவு, சனி

வார்ட்டுகளுடன் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அனலைதீவு ஆஸ்பத்திரி கட்டிடம் சுகாதார இலாகாவினரால் பொறுப்பேற்கப்பட்டது. சுகாதார இலாகா அதிகாரிகள் அனலைதீவுக்குச் சென்று கட்டிடத்தைப் பார்வையிட்டு கையேற்றுக்கொண்டனர். இம்மாத முடிவில் இவ் ஆஸ்பத்திரி திறந்துவைக்கப் படும்.

### நோயாளர் கஷ்டம்

புலோலி, சனி

நாடுமுழுவதிலுமுள்ள ஆஸ்பத்திரி ஆய்வுகூட தொழில் நுட்ப உதவியாளர்களின் வேலைநிறுத்தத்தால் மந்திகை ஆஸ்பத்திரியிலும் 3 தொழில்நுட்ப உதவியாளர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளனர்

கடந்தநான்கு நாட்களாக ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது.

மந்திகை ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பகுதி ஆய்வுகூடம் கடந்த நான்கு நாட்களாக மூடப்பட்டிருப்பதால் நோயாளிகள் பெரிதும்கஷ்டமடைந்துள்ளனர்.

### ஜெனரல் மனேஜருடன் தூதுக்குழு சந்திப்பு

ரயில்வே ஜெனரல் மனேஜர் திரு. பி. டி ரம்பாலாவை, வேலைநிறுத்தம் செய்துவரும் ரயில் என்ஜின் சாரதிகள் யூனியனின் பிரதிநிதிகளும் ரயில் கார்டுகளின் பிரதிநிதிகளும் இன்று காலை சந்தித்துப்பேசினர். ரயில்வே ஊழியர்களின் புதிய சம்பள விகிதத்தைதிறைசேரிநேற்று அங்கீகரித்திருப்பதாக திரு. ரம்பாலா அவர்களுக்குத் தெரிவித்து புதிய சம்பள விகிதம்பற்றி விளக்கியும் கூறினராம். ஒவ்வொரு ஊழியருக்கும் 4 ரூபாய் முதல் 6 ரூபாய்வரை அவரவர்சம்[illegible]

#### சரக்குவண்டிகள்

ரயில் என்ஜின் சாரதிகளினதும் கார்டுகளினதும்வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதேசமயம் அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் சரக்குவண்டிகள் நேற்றுப் போல் இன்றும் மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் கொழும்பு நகரில் பிரயாணிகள் வண்டிகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவைசெய்கிறதென்றும் ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்துவிலில் நேற்று நடந்த தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் முன்னுள் எம். பி. திரு. வி. குமாரசாமி பேசும் போது மேற்கண்டவாறு கூறினுர்.

திரு இ. செல்லையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. குமாரசாமி மேலும் கூறியதாவது:

கடந்த காலத்தில் தமிழரசு எடுத்த நடவடிக்கைகள் தமிழ் மக்களின் கௌரவத்தையும் சுயமரியாதையையும் குறைத்து விட்டது: தமிழரசு கட்சியினரின் ...னர் 5 வருடம் கழித்தது 1965-ம் ஆண்டு யூ என் பியை ஆதரித்தது. 1960-ம் ஆண்டு தமிழரசு கட்சி யூ என் பி அரசாங்கத்தை வீழ்த்த ஒத்துழைத்தது பெரிய தவருகும். 1960-ம் ஆண்டுக்கு பின்னர் தான் தமிழர் பொருளாதார அரசியல் ரீதியில் பல கஷ்டங்களை அடைந்தார்கள்.

திருவாளர்கள் வி ஆனந்தசங்கரி, எஸ் தர்மலிங்கம், கே ராஜகுலேந்திரன், குமார் பொன்னம்பலம் ஆகியோரும் பேசினுர்கள்.

மேசை ஒன்றின்மீது ஏறி நின்று உரையாற்றுகையில் கூறினுர். சங்கத்தின் காரியதரிசி திரு பி. யோகரத்தினுவும் மேசை மீது நின்றுகொண்டு உணர்ச்சி வசப்பட்டு உரையாற்றினுர்.

''இம்முறை வாசலுக்குள் நுழைந்து கூட்டம் நடத்துகிறும்; இனி சபைக்குள்ளேயே நுழைந்து கூட்டம் நடத்துவோம்'' என்று அவர்கள் கூறினுர்கள்.

ஐந்தாறு பேர்களாக ஆட்சி[illegible]ற வாசலுக்கு இந்தமாணவர்கள் பொலி[illegible]ருக்குத் தெரியாமல் சென்று, நூற்றுக்கணக்காக கூடினர்.

## உதவிமந்திரியைச் சந்தித்தனர்

இதன்பின் உதவிக் கல்வி அமைச்சர் திரு. காமினி ஜயசூரியாவை மாணவர் தூதுக்குழு சந்தித்துத் தங்கள் குறைகளை எடுத்துக்கூறினர். அவர்கள் கூறியவற்றைக் கவனமாகக் கேட்ட உதவிஅமைச்சர் அவற்றைக் கல்வி அமைச்சரின் கவனத்துக்குக்கொண்டு வந்து ஆவன செய்வதாகக் கூறினுர். இதன் பின் மாணவர் கலைந்து சென்றனர்.

2,000க்கு அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் இதேசமயத்தில், ஆட்சி மன்ற கட்டத்துககு வெளியே நின்று பலத்த கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

உதவி அமைச்சர் திரு. காமினிபொன்சேகா கட்ட நுழைவாசலில் கூடிநின்று கூட்டம் நடத்திகொண்டிருந்த பல்கலைககழக மாணவர்களைச் சந்தித்து பேசிய பின்னரே அமைதியாகத் திரும்பிச்சென்றனர். மாணவர்கள் திரும்பும்போது மணி 11-45.

### கோரிக்கை

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வங்கிக்கடன்தேவையில்லையென்றும் 'பேர்சறி' (பண உதவி) யே வழங்க வேண்டுமென்றும், வெளியேற்றப்பட்ட நான்கு பல்கலைக்கழக மாணவர்களையும் மீண்டும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அடுத்த வாரமே பல்கலைககழகம் திறககவேண்டுமென்றும் கோரியே பல்கலைககழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

கிறது.

மந்திகை ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பகுதி ஆய்வுகூடம் கடந்த நான்கு நாட்களாக மூடப்பட்டிருப்பதால் நோயாளிகள் பெரிதும்கஷ்டமடைந்துள்ளனர்.

அங்கீகரித்திருப்பதாக திரு. ரம்பாலா அவர்களுக்குத் தெரிவித்து புதிய சம்பள விகிதம்பற்றி விளக்கியும் கூறினுராம். ஒவ்வொரு ஊழியருக்கும் 4 ரூபாய் முதல் 6 ரூபாய்வரை அவரவர்சம்பளத்துக்கேற்ப அதிகரிக்குமென்பதை அவர் சுட்டிக்காட்டினுராம். இந்தச் சந்திப்பினுல் சில தப்பபிப்பிராயங்கள் நீக்கப்பட்டதாக பின்னர் திரு. ரம்பாலா சொன்னுர்.

நாளொன்றுக்கு இப்போது வழங்கப்படும் ரூ. 1-50 'பட்டா' 4-75 ஆகவும் ரூ. 7-50 ஆக வழங்கப்படுவது ரூ. 9-50 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்,

ஆனுல் ஜெனரல் மனேஜர் தெரிவித்த சம்பள விகிதம் 'பட்டா' சம்பந்தப்பட்டதென்றும் தங்களுடைய கோரிக்கை அதுவல்லவென்றும் தொழிற்சங்கப் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்

...தாகவும் கொழும்பு நகரில் பிரயாணிகள் வண்டிகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவைசெய்கிறதென்றும் ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

### வேலைக்குத் திரும்பியவர்கள்

4 ரயில் என்ஜின் சாரதிகளும் 3 கார்டுகளும்நேற்று வேலைக்குத் திரும்பியுள்ளதாகவும் சரக்கு வண்டிகள் சிலவும் பிரயாணிகள் வண்டிகள் சிலவும் இப்போது சேவையிலீடுபட்டிருப்பதாகவும் ரயில்வே அதிகாரியொருவர் தெரிவித்தார்.

### தபால்கள்

முக்கியமான தபால்கள் உடனுக்குடன் அனுப்பப்படுவதாகவும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குத் தபால்கள் ஒருநாள் தாமதமாகவே சென்றடையுமென்றும் தபால்மா அதிகாரி திரு வேர்ணன் அபயசேகரா தெரிவித்தார்.

## எஸ். டி. பண்டா எழுப்பிய கோஷம்

கொழும்பு, ஞாயிறு

பல்கலைக்கழக மாணவர்கள் ஆட்சிமன்றத்தின் நுழைவாசலில் ஆர்ப்பாட்டம் நடாத்திக்கொண்டிருந்தபோது, சபையில் பீகிங் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. எஸ் டி. பண்டாரநாயக்கா பேசிக்கொண்டிருந்தார்.

அப்போது நுழைவாசலில் மாணவர்களின் ஆர்ப்பாட்டச் சத்தம் வானைப்பிளந்துகொண்டிருந்தது.

திரு. எஸ். டி. பண்டாரநாயககா வெளியேமாணவர்களின் சத்தத்தை கேட்டுவிட்டு, ''நாட்டில் புரட்சி ஒன்று நடக்கப்போகிறது என்பதற்கு அறிகுறியாக இப்போது வெளியே சத்தம் ஒலித்துக் கொண்டிருக்கிறது'' என்ருர்.

பின்னர் வெளியே வந்து மாணவர்களுடன் சேர்ந்துகொண்டு, 'போராட்டம் வாழ்க! போராட்டம்வாழ்க! என்று கோஷங்களை எழுப்பினுர்.

## ஆய்வுகூடஊழியர் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கடந்த பத்துத்தினங்களாக வேலை நிறுத்தம் செய்து வரும் ஆஸ்பத்திரி ஆய்வு கூட தொழில்நுட்ப ஊழியர்களின் கோரிக்கைகள் சம்பள வேறுபாட்டு விசாரணை கமிஷனர் திரு. ஏ. ஓ. வீரசேகராவிடம் சமர்ப்பிக்கப்பட்டது: இவர்களது கோரிக்கைகளை அமைச்சிடம் பரிசிலனைக்காகச் சமர்ப்பிப்பதாக அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து இவர்களு[illegible]ய வேலைநிறுத்தம் நடைபெறுகிறது.

## லொறிகளில் பிரயாணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ரயில் சேவை தடைப்பட்டுள்ளதாலும் பஸ்ஸில் இடம் கிடைக்காததாலும் இப்போது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சிலர் லொறிகள் மூலமாக பிரயாணம் செய்வதாகத் தெரிய வருகிறது. மூடப்பட்டுள்ள கொழும்பு பல்கலைக் கழகத்தை சேர்ந்த மாணவ மாணவிகள் சிலர் இவ்விதம் லொறிகளில் வந்தார்களாம், (தே. நி)

## கிராமசபை சிபார்சு

கோப்பாய், சனி

கோப்பாய்ப் பகுதிக்கென நான்கு சமாதான நீதிபதிகளை நீதி அமைச்சு வெகு விரைவில் நியமனம்செய்யவுள்ளது. இந்நியமனத்திற்கான சிபார்சை கோப்பாய் கிராமசபை அனுப்பிவைத்துள்ளது.

15 ம் வட்டார அங்கத்தவர் திரு ஆர். சரவணமுத்து 6-ம் வட்டார அங்கத்தவர் திரு. பொ. திருஞானசம்பந்தர், கோப்பாய் வடக்கு கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு: கே. ஆர். குமாரசாமி, இளைப்பாறிய தபால் அதிபர் திரு. எஸ். பரமலிங்கம் ஆகியோரது பெயர்களை கிராமசபை சிபார்சு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

## இம்மாத இறுதியில் கொழும்பில் சந்திர பாறை

கோட்டை ஞாயிறு

அப்பலோ வீரர்களால் கொண்டுவரப்பட்ட சந்திர பாறையின் ஒரு பகுதி இம் மாதம் 17 ம் திகதி முதல் 20-ம் திகதிவரை கொழும்பில் கண்காட்சிக்கு வைக்கப்படும் கண்டியில் 22-ம் திகதியும் 23-ம் திகதியும் சந்திரப்பாறையை பொது மக்கள் பார்க்கலாம்.

குடும்ப

## கட்டுப்பாட்டுக்கு 5 கோடி டாலர்

புதுடில்லி, டிச 6

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கென பாரதத்துக்கு அமெரிக்கா 5 கோடி டாலர் வரையான உதவி வழங்கவிருக்கிறது.

## புதிய பதிவுகாரர்

மல்லாகம், சனி

மயிலிட்டி தெற்கு கிராம சேவையாளர்பிரிவுக்கு விவாகப்பதிவு காரராக குரும்பசிட்டியைச்சேர்ந்த திரு. தா. இளையதம்பி ஜே.பி உள்நாட்டு அமைச்சினுல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். திரு இளையதம்பி தற்போது குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவராக இருந்து வருகின்ருர்.

## நீர்கொழும்பு மாநகரசபை தேர்தல்

கோட்டை, சனி

நாளை நீர்கொழும்பு மாநகரசபைத் தேர்தல் நடைபெறுகிறது 12 வட்டாரங்களில் நடைபெறும் இத் தேர்தலில் 30 000க்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களிக்கும் உரிமை பெற்றுள்ளனர்.

## 'சமயத்தை மறந்து சினிமாவை நாடுகிருர்கள்'

மாவிட்டபுரம், சனி

''இன்றைய சிறுவர்கள் சமயத்துறையில் அதிகம் ஈடுபடாது சினிமாத்துறையிலேயே தம் காலத்தை செலவிடுகிருர்கள். இந்நிலைமாற நாவலர் காட்டிய வழியில் மாணவர்கள் சென்ருல் அவர்கள் சமயப்பணிக்குதொண்டாற்றுவதோடு நல்ல சைவர்களாகவும் திகழ்வார்கள்''

இவ்வாறு தெல்லிப்பழை பாலர் ஞானோதயா சபையினரால் காசிவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடத்தப்பட்ட நாவலர் குருபூசை விழாவில் உரையாற்றிய பிரம்மஸ்ரீ மு. சிவகடாக்ஷ குருக்கள் கூறினுர்.

## இன்று காங்கேசன்துறை பட்டினசபைத் தேர்தல்

### 4-ம், 5-ம் வட்டாரத்தில் பகிஷ்கரிப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறை பட்டினசபையின் ஆறு வட்டாரங்களுக்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது:

ஊறணியைத் தனிவட்டாரமாக்கி தரும்படி கோரியிருந்தும் அதை உள்ளூராட்சி ஆணையாளர் ஏற்றும் செயலில் காட்டாமல் விட்டதால் ஊறணி புனித அந்தோனியார் கிராம முன்னேற்ற சன சமூகநிலையம் தேர்தலை பகிஷ்கரிக்கவேண்டும் எனத் தீர்மானித்தது.

இதற்கமைய 4ம், 5ம் வட்டாரத்தைச் சேர்ந்த 300 வாக்காளர்கள் தேர்தலில் கலந்து கொள்ளமாட்டார்கள் என அறியப்படுகிறது.

இப்பட்டின சபையின் 5 வட்டாரங்களில் நேரடிப் போட்டி நடைபெறும். 3ம் வட்டார உறுப்பினர் திரு எஸ் குமாரசாமி போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார், போட்டியிடுவோர் விபரம் வருமாறு —

1ம் வட்டாரம் திரு க ஜெயபாலசிங்கம், திரு எஸ் சோதி

2ம் வட்டாரம் (தற்போதய தலைவர்) திரு ஆ வ சதாசிவம், திரு: கே. தேவராசா

3ம் வட்டாரம் திரு எஸ் குருசாமி (போட்டியின்றித் தெரிவு)

4ம் வட்டாரம் திரு எஸ் நாகரத்தினம், திரு வி வேலாயுதம், திரு எஸ் வன்னிய சிங்கம்

5ம் வட்டாரம் திரு வி இரத்தினராசா, திரு சி கணபதிப்பிள்ளை

6ம் வட்டாரம் திரு வி பேரின்பம், திரு எஸ் இராமநாதன், திரு செ மரிசலீன்

இம்முறை தேர்தலில் தற்போதைய தலைவர் உட்பட பல புதியவர்களே போட்டியிட இருக்கின்றனர்

பழைய தலைவர்களான திரு சு கிருபாமூர்த்தி, திரு மு திடவீரசிங்கம், திரு சு சீனிவாசகம் ஆகியோர் இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை.

கொழும்பு, சனி

இலங்கை போக்குவரத்து சபை தொழிற்சங்கங்கள் இன்று கூடி ரயில் ஊழியர் வேலைநிறுத்தத்தை முறியடிப்பதற்கு தம்மை அரசாங்கம் பயன் படுத்துவதாகக் குற்றஞ்சாட்டின.

இது சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தன.

எந்நேரத்திலும் இ. போ, ச. ஊழியர்களும் நேரடி நடவடிக்கையில் இறங்கலாம் என்று தொழிற்சங்க பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## கொழும்பு மாநகரசபை தேர்தல் சூடு பிடிக்கிறது

கோட்டை, ஞாயிறு

கொழும்பு மாநகரசபைத் தேர்தல் பிரச்சாரம் சூடு பிடிக்க ஆரம்பித்து ளது. தேர்தல் நடப்பதற்கு இன்னும் ஒன்பது தினங்கள் மட்டும் இருப்பதால், பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவியும் தீவிரத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். முப்பதுக்கு அதிகமான தேர்தல் பிரச்சாரக்கூட்டங்களில் பிரதமர் கலந்து கொண்டு உரையாற்றுவார். இதே அளவு தொகையான பிரச்சாரக்கூட்டத்தில் திரு. பண்டாரநாயக்காவும் கலந்துகொண்டு உரையாற்றுவார்.

மற்றைய தலைவர்களும் தீவிரமான தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு பிரச்சாரம்செய்து வருகின்றனர்.

## திருட்டு

எழுவைதீவு, சனி

எழுவைதீவு புனித தொம்மையப்பர் தேவாலயத்தில் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான முடிநகைகள் களவாடப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

தீவிர புலன் விசாரணை செய்த பொலிசார் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஒருவரைக் கைதுசெய்து விசாரணைசெய்து வருகின்றனர்.

## நூல்கள் அன்பளிப்பு

கோட்டை, சனி

கேகாலை கனிஷ்டதொழில் நுட்பக்கல்லூரி நூல்நிலையத்திற்கு அமெரிக்கத் தூதராலயம் தொழில் நுட்பவியல் நூல்கள் பலவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

15,000 ரூபா பெறுமதியான மேற்படி நூல்களை தொழில் நுட்பககல்லூரி அதிபர் திரு. இ. நணதுங்கா பெற்றுக்கொண்டார்

## பரிசளிப்பு

சுழிபுரம், சனி

வழக்கம்பறை சன சமூக நிலைய பஜனைச்சபையினர் நடத்திய சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு இம்மாதம் 19-ம் திகதி மாலை வழக்கம்பறை அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனை விழாவின் போது பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

காங்கேசன்துறை ப. ச. கூட்டம்

## 2 உறுப்பினர் மட்டுமே சமுகமளித்திருந்தனர்

காங்கேசன்துறை னி

காங்கேசன்துறைப் பட்டினசபையின் 1970-ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் சபை மண்டபத்தில் கூடியபொழுது தலைவர் திரு ஆ வ சதாசிவம்உட்பட 11 அங்கத்தவர்கள் பிரசன்னமாயிருக்கவில்லை. உபதலைவரும் 5-ம் வட்டார அங்கத்தவருமான திரு. சசிவனடியாரும் 1-ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. கிருபாமூர்த்தியும் மட்டுமே சமுகமளித்திருந்தார்கள்.

கூட்டம் தொடங்கியதும் திரு. கிருபாமூர்த்தி பேசினுர். ''விவாதிக்கப்பட வேண்டிய வரவுசெலவுத் திட்டம் இப்பட்டின மக்களின் அடுத்த ஒருவருட நலனையும் அபிவிருத்தியையும் பொறுத்தவிஷயமாகும். தற்போது இருக்கின்ற ஆறுஅங்கத்தவர்களில் ஐந்து அங்கத்தவர்கள் நாளை மறுநாள் நடைபெறும் தேர்தலில் போட்டியிடவில்லை. தலைவர் மட்டுமே போட்டியிடுகின்ருர். இந்நிலையிலும் வரவு செலவுத் திட்ட விபரங்களை ஆராய்ந்து, கேட்கவேண்டியவற்றைக் கேட்டு நாங்கள் ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு இந்த இடத்தில் தலைவர் கண்டிப்பாக பிரசன்னமாயிருத்தல் வேண்டும். தலைவர் பொறுப்பற்றமுறையில் நடந்துகொண்டதால் ஆறு அங்கத்தவர்களில் குறைந்தபட்சம் மூன்று பேராவது பிரசன்னமயிருந்தால் சற்று ஆலோசிக்கலாம்'' எனக் கூறித் தாம் கூட்டத்தினின்றும் வெளியேறினுர். இதையடுத்து கூட்டம் நடத்துவதற்குக் குறைந்தபட்ச அங்கத்தவர்கள் இல்லாதபடியால் கூட்டத்திற்குத் தலைமை வகித்த உபதலைவர் திரு. சிவனடியார் கூட்டத்தைஒததிவைத்தார். ......

## பரீட்சை ஒத்திவைப்பு

கோட்டை, ஞாயிறு

தட்டெழுத்தாளர் பதவி உயர்வுக்கான பரீட்சை பிற்போடப்பட்டுள்ள தாகவும் அடுத்தவருடம் பெப்ரவரி 27-ம் திகதியே இப்பரீட்சை நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.


## அறிவித்தல்

அச்சுவேலி லிபேட்டி சினிமா தற்போது எனது நிர்வாகத்தின் கீழ் இயங்கவில்லை என்பதையும், அதனுல் ஏற்படும் கொடுக்கல், வாங்கல் ஆகியவற்றுக்கு நான் பொறுப்பாளியல்ல என்பதையும் பொதுமக்களுக்கு அறியத்தருகிறேன்.

இ. மகேந்திரன்
மனேஜர்
ராணி சினிமா
யாழ்ப்பாணம்.

1689


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சகல பகிரங்க பரீட்சைகளுக்குமுரிய பொதறிவு வினு - விடை புதிய பதிப்பு 2000க்கு மேற்பட்ட வினு-விடைகள் ஆக்கம் திரு. க. ந. பஞ்சாட்சரம் விலை 3 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை, 213, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1590

லொறி:

நல்ல நிலையில் உள்ள 24 சிறீ இலக்க முடைய தேக்கு பொடி அடித்த லொறி, பெரிய லொறி எடுப்பதற்காக விற்பனைக்குண்டு கூடிய விலை கேட்பவருக்கு கொடுக்கப்படும். 7-ம், 8-ம் திகதியில் பார்வையிடலாம். மங்களா பேணிச்சர் ஸ்ரோர், 250, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1591

மல்லாகம் கோட்டுக்கருகாமையில் வீடு கட்டுவதற்கு வசதியான 7 1/2 பர. காணி விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு K. விஜயரத்தினம், நெடுங்கேணி, அளவெட்டி வடக்கு. 1593

கார்:

மிகவும் நல்ல நிலையில் சொந்தப் பாவிப்பிலுள்ள E N கடைசித் தொடர்பிலக்கமுள்ள மொறிஸ் ஒக்ஸ்வோட் கார் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க. Dr. க. செல்வத்துரை, சங்கரத்தை, வட்டுக்கோட்டை. 1592

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## தேவை

துவிச்சக்கரத்திலும், காரிலும் சென்று சோப்பும் பற்பொடியும் வியாபாரம் செய்ய அனுபவமுள்ள ஒருவர் தேவை. 23-12-69 க்கு முன் விண்ணப்பிக்கவும். பிணைப்பணம் ரூபா 500/- கட்டவேண்டும். ச. மா. செந்திவேல், நடராஜா வீதி, வல்வெட்டித்துறை. 1586

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 7—12—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6.30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாணவர் மன்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடுபாப்பா, 5-45 அஸான்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின், 7-35 வானொலி குறுக்கெழுத்துப் போட்டி. 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## கேள்வி விளம்பரம்

### உடுப்பிட்டிக் கிராமசபை

வடக்கு மணியகாரன் தோட்டம் வீதி வேலைக்கு 1969-ம் ஆண்டு மார்கழி மாதம் 22-ந் திகதி காலை 9-30 மணி வரை கேள்விப் பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 20-12-69 பி. ப. 3 மணி வரை கி. ச. காரியாலயத்தில் வழங்கப்படும். கேள்விப் பணம் ரூபா 50/- பத்திரப்பணம் ரூபா 15/-. விபரங்கள் கி. ச. காரியாலயத்திலும் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

இ. இ. தர்மரத்தினம்,
அக்கிராசனர்.

அலுவலகம்,
கி. ச. உடுப்பிட்டி.
4-12-69. 1868

## எதிரி விடுதலை

மல்லாகம், ஞாயிறு

கத்தியால் குத்தி கொலை செய்ய முயற்சித்ததான வழக்கு விசாரணை முடிவில் மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி எதிரியை விடுதலை செய்தார்.

சங்கானை வாசியான கே. இராசரத்தினம் என்ற வாலிபருக்கு எதிராக சித்தங்கேணியைச் சேர்ந்த எஸ். கந்தையா என்பவரை கொலை செய்ய எத்தனித்ததாக சங்கானைப் பொலிசார் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் சிவ சிறீதரன் ஆஜரானார்.

## ஏல விற்பனை

5-12-69 அன்று நடைபெறவிருந்த நகரசபையின் பண்டகசாலை பழைய சாமான்கள் ஏலவிற்பனை எதிர்வரும் 9-12-69 காலை 10-00 மணிக்கு வவுனியா வாடிவீட்டில் ஏலத்தில் விற்கப்படும். இவற்றை வாங்க விரும்பும் கூடிய கேள்விக்காரர் கேள்வித் தொகையைச் செலுத்திப் பொருட்களையும் அப்புறப்படுத்துதல் வேண்டும்.

ம. பொன்னையா,
தலைவர்,
நகரசபை,
வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா,
4-12-69. 1867

## மேசன் பயிற்சிநிலையம்

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவு மேசன் பயிற்சி நிலையத்தில் புதுமாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கிறது.

வெளியூர் மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் நயினாதீவு நெடுந்தீவு, அனலைதீவு மாணவர்கள் தங்குவதற்கு இலவச இடவசதி செய்து கொடுப்பதற்கு புங்குடுதீவு கல்விவளர்ச்சிக்கழகம் முன்வந்துள்ளது என அதன் காரியதரிசி திரு. பூவிசா தெரிவித்துள்ளார்.

## சமய தீட்சை

சுழிபுரம், சனி

நயினை பிரதிட்டா பூஷணம் ஐ. கைலாசக்குருக்கள் பிரம்மஸ்ரீ சோ. நடராசக் குருக்கள் ஆகிய இருவர்களிடமும் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவிலில் முப்பது பேர் சமய தீட்சை பெற்றனர்.

பண்ணாகம் இந்து சமய விருத்திச் சங்கத்தினரின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வைபவத்தில் ஐ. கைலாசநாதக்குருக்கள் தீட்சையின் பலாபலனை பல மேற்கோள்களுடன் எடுத்துவிளக்கினார். சமய தீட்சை விளக்கநூல்களும் இலவசமாகக் கொடுக்கப்பட்டன.

## வீட்டிற்கு பஸ்ஸை செலுத்திய சாரதி

கோட்டை சனி

வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ... இரட்டைத் ... பஸ்ஸைச் செலுத்தி வீட்டுக்கு ஓட்டிச் சென்ற இ:

## 20 வயது மாணவர் கிணற்றுள் மூழ்கிமரணம்

புலோலி, சனி

கரவெட்டி விக்னேஸ்வவராக் கல்லூரியில் கலைப் பிரிவில் கல்விபயிலும் ராஜா என்றழைக்கப்படும் 20 வயது மாணவன் தன் சொந்த ஊரான துன்னாலையிருக்கும் வீட்டுக்கிணற்றில் குளிக்கச் சென்ற சமயம் தவறுதலாக தட்டுப்பட்டுகிணற்றுள் வீழ்ந்துமூழ்கி மரணமடைந்த சம்பவம் வார இறுதியில் நிகழ்ந்துள்ளது.

காலஞ்சென்றவர் துன்னாலைப் பகுதியின் முன்னைநாள் கிராமசேவகர் திரு. கே. கந்தசாமியின் மகனாவார்.

கிணற்றில் குளிக்கச்சென்றதாகவும் அச்சயமயம் எதிர்பாராதவிதமாக கிணற்றுள் வீழ்ந்த தமதுமகனை கிணற்று நீர் இழுது ஓர் மூலையில் ஒதுக்கியதால் மரணம் ஏற்பட்டதெனவும் மரணவிசாரணை அதிகாரிமுன் இறந்தவரின் தகப்பனார் சாட்சியமளிக்கையில் கூறினார். மரண விசாரணை அதிகாரி திரு ஆர். எஸ் இராமநாதன் தற்செயலாக நடைபெற்ற விபத்துமரணமெனத் தீர்ப்பளித்தார்.

## படம் தொங்கவிட மறுப்பு

கோட்டை, சனி

கைத்தொழில் அமைச்சர் திரு பிலிப் குணவர்த்தனாவின் புகைப்படங்களை இ. போ. ச, டிப்போக்களிலும் காரியாலயங்களிலும் தொங்கவிட அனுமதிக்குமாறு கோரப்பட்டதை இ.போ.ச. அதிபர் நிராகரித்துள்ளார்,

சமஸ்தலங்கா மோட்டார் சேவக சுமிதிய மேற்கண்டவாறு அனுமதி கோரியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## களத்தாவை கொலை வழக்கு

கோட்டை, சனி

'அம்மோ' என்று யாரோ அவலக்குரல் எழுப்பும் சத்தம் எனக்கு கேட்டது. நான் ஓடிச்சென்று பார்த்தபோது ஒருவர் கீழே விழுந்து கிடந்தார். லில்லிமாமாவும் களு அல்பேர்ட்டும் தடிகளால் அந்த மனிதரைத் தாக்கிக் கொண்டிருந்தார்கள். பின்னர் டிராக்டர் ஒன்றில் அந்த மனிதனைப் போட்டுக் கொண்டு காட்டுக்குச் சென்றார்கள்'

களத்தாவை இரட்டைக் கொலை வழக்கு கொழும்பு சுப்ரீம் கோர்ட்டில் ஆங்கிலம் பேசும் ஜூரர்கள் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டபோது பி. ஜெயசேனா என்பவர் சாட்சியமளிக்கையில் கூறினார்;

நீதியரசர் திரு... ரி. பண்டிக குணவர்த்தன முன்

## கார்த்திகைத் திருவிழா

ஊர்காவற்றுறை, சனி

சரவணை—தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் கார்த்திகைத் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

தீபவிழா வைபவத்தைத் தொடர்ந்து சுவாமி வீதி வலம்வரும் காட்சியும் நடைபெற்றது.

## பெற்றோர்தின விழா

யாழ்ப்பாணம், சனி

வண்ணை சிறுவர் பாடசாலை பெற்றோர்தின விழா வருகிற 8-ம் திகதி மாலை 3 மணிக்கு நடைபெறவிருக்கிறது. யாழ். மாநகரசபை மேயர் திரு. சி, நாகராசா தலைமையில் நடபெறும் இவ்விழாவில் திரு. கே. பி. ஹரன், மாநகரசபை உறுப்பினர் ஜனாப் எம் ஜி. பஷீர் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர். திருமதி நாகராசா வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களை வழங்குவார்.

## சாதிப்பெயரை ஒழிக்க நடவடிக்கை

கோப்பாய், சனி

கோப்பாய் கிராமசபை வெகு விரைவில் வீதிகளுக்குப் பெயர்சூட்டும் தனது தீர்மானத்தை அமுல்நடத்த நடவடிக்கையெடுத்துள்ளது என கோப்பாய் கி. ச. தலைவர் திரு. தி. பரமானந்தராசா தெரிவித்துள்ளார்.

புதிதாகச் சூட்டும் பெயர்கள் ஒரு குறித்த சமூகத்தையோ சாதியையோ குறித்ததாக இருக்கமாட்டாதெனவும், தற்போது அத்தகைய பெயர்கள் ஏதாவது இருப்பின் அதனைத் தாம் மாற்றியமைக்க உடன் ஆவன செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.


கடைசி வாரம்

**வின்ஸர்**

(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

தென்னகத் திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்



**அரைச்சலார்**

**1-1-70 முதல் 15-1-70 வரை**

**கொழும்பு ஸ்ரூடியோ**

யாழ்ப்பாணம்


## 'காந்தியின் வழியில்விடுதலை பெறப் பாடுபடுகின்றோம்'

### — திரு. அமிர்தலிங்கம் எம். பி.

சுழிபுரம், சனி

"உலகம் போற்றும் உத்தமர் காந்தியின் அறப்போராட்டம் மூலம் விடுதலைகாணலாம்' என நாம்பாடுபடுகின்றோம். ஆனால் 'விடுதலை வேட்கை'யின் நூலாசிரியர் சுபாஸ் சந்திரபோசின் மறப் போராட்டம் மூலம் புரட்சிகண்டு இனத்தின் விடிவுகாண வேண்டும்என்று எண்ணுகின்றார். விடுதலை வேட்கையின் தாகம் அவ்வாறு எண்ணத்தூண்டியுள்ளது.

இவ்வாறு திரு. ஆ சேயோன் எழுதிய 'விடுதலை வேட்கை' நூல் வெளியீட்டு விழாவில் நூலை வெளியிட்டு வைத்துப் பேசிய வட்டுக்கோட்டை எம்.பி, திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறினார்.

திரு. செ. திருநாவுக்கரசு தலைமையில் சுழிபுரம்கிராம சபை திறந்த வெளியரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் திரு அ. அமிர்தலிங்கம் மேலும் பேசியதாவது:-

'இன்றுநாம் ஜனநாயகக் கோட்பாட்டில் வாழ்ந்தாலும்கூட பெரும்பான்மையினரால் சிறுபான்மையினராகிய நாம் நசுக்கப்படுகின்றோம். ஆனாலும் எமது இளைஞர்கள் மத்தியில் எழும் புரட்சிக்கருத்துக்கள், எண்ணங்கள் நாம் என்றோ விடுதலைகாண வைக்கும் என்பது திண்ணம்.

சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு. சு. கந்தசாமி க. வாமதேவன் புலவர் கா. வேல்முருகன், வழக்கறிஞர் இ. சிவபாக்கியநாதன் திரு செ. ஸ்ரீநிவாசன் உட்படப் பலர் பேசினர். பண்டிதர் ப இராசகுரு வரவேற்புரை நிகழ்த்தினார்.

## பிரதான பாதையில் குட்டிச்சந்தை

புலோலி, சனி

மாலி சந்தியிலிருந்து வதிரிக்குச் செல்லும் பிரதான வீதியில் 'குட்டி' சந்தை ஒன்று ஆரம்பிக்கத் பட்டுள்ளது: இந்தச் சந்தையில் மரக்கறி வியாபாரிகளாலும் மீன் வியாபாரிகளாலும் வாகனம் ஓட்டுபவர்களும் பாதசாரிகளும் பெரும்கஷ்டத்துக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப்பிரதான வீதியை இந்த குட்டிச்சந்தை வியாபாரிகள் விபத்துக்கள் நேரிடக் கூடியமுறையில் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர்.

## கொள்வனவு நிலையங்கள்

வத்தளை, சனி

உற்பத்திப் பொருள்கொள்வனவு இலாகா தெங்குபயிர் செய்கை நடைபெறும் பகுதிகளில் 200 தேங்காய் கொள்வனவு நிலையங்களை நிறுவத் தீர்மானித்துள்ளது.


**நீரிறைக்கும் இயந்திரங்கள்**

சிறிய, பெரிய "வில்லியேர்ஸ்" இயந்திரம் இணைக்கப்பெற்ற "ஈசிப்பிறைம்", "சிக்மன்ட்" நீரிறைக்கும் இயந்திரங்கள் தற்பொழுது இறக்குமதிசெய்யப்பட்டு கட்டுப்பாடின்றி விற்பனவுக்கு எம்மிடம் இருக்கின்றன.

உங்கள் தேவையை உடனடியாக எம்மிடம் பெற்றுக்கொள்ளவும்.

இந்நிலைபரம் நிலையானதல்ல. தங்கள் தேவைக்கு முந்துங்கள்.


# "முஸ்லிம் சமூகம் விரும்பினாலன்றி விவாகச் சட்டம் மாற்றப்படமாட்டாது"

## செனட் சபையில் நீதி அமைச்சர் உறுதி

— நமது நிருபர் கே. சிவராஜசூரியர் —

கொழும்பு, சனி

முஸ்லிம் திருமண, விவாகரத்து திருத்த மசோதாவை நேற்று செனட் சபை கூடிய போது நீதி அமைச்சர் செனட்டர் திரு. ஏ. எவ். விஜயமானே சமர்ப்பித்தார்

இம்மசோதா மீது பேசிய செனட்டர் திரு. ஐ. ஏ. காதர் முஸ்லிம் சமயத்தவர் ...

ஒரு சம்பளத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

செனட்டர் எம் டி. கிச்சிலான் பேசுகையில் எனக்குத் தெரியக்கூடியதாக கொழும்பில் ஒரு முஸ்லிம் வழக்கறிஞரை காதியாக நியமித்தார்கள். ஆனால்

தல்ல. இவ்வதிகாரம் உயர் நீதிமன்றத்திடம் தான் இருக்க வண்டும். அத்துடன் ஒரு குறிப்பிட்ட காதியினால் விசாரிக்கப்பட விரும்பாத ஒருவருக்கு இன்னுமோர் காதியை நியமிப்பதற்கு வசதியளிக்கப்படவேண்டும். இவற்றை நான் ஒரு எதிர்க்கட்சி அங்கத்தவனென்ற முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று செனட் சபை கூடிய போது நீதி அமைச்சர் செனட்டர் திரு. ஏ. எவ். விஜயமானே சமர்ப்பித்தார்

இம்மசோதா மீது பேசிய செனட்டர் திரு. ஐ. ஏ. காதர் முஸ்லிம் சமயத்தவர்களின்பராமரிப்பு விவாகரத்துப் போன்ற வழக்குகளை விசாரிப்பதற்கு காதிமார்கள் நியமிக்கப்படுகிறுர்கள் ஆனுல் சட்டத்தில் எதுவித புலமையுமில்லாதவர்களையெல்லாம் இவ்வரசாங்கம் காதிகளாக நியமிக்கிறது. இந்நிலையை மாற்றி உண்மையான தகைமையுள்ளோர்களை யே காதிகளாக நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ருர்

அவர் மேலும் பேசுகையில் இலங்கையிலுள்ள 9 மாகாணங்களுக்கும் ஒன்பது காதிமார்களையும், அத்துடன் தற்காலிகமாகக் கடமையாற்ற மேலதிகமாகவும் சில காதிமார்களையும் நியமிக்கவேண்டும், அத்துடன் இப்போது காதிமார்களுக்கு நூறு நூற்றி ஐம்பது ரூபாக்கள் வரையிற்தான் சம்பளம் வழங்கப்படுகிறது. சிலர் அதையும் வாங்காது சமுதாயத்திற்குத் தொண்டாற்றுகிருர்கள், இவர்களுக்கெல்லாம் ஒழுங்கான வடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

செனட்டர் எம் டி. கிச்சிலான் பேசுகையில் எனக்குத் தெரியக்கூடியதாக கொழும்பில் ஒரு முஸ்லிம் வழக்கறிஞரை காதியாக நியமித்தார்கள். ஆனுல் அவரால் திருப்திகரமாகக் கடமையாற்ற முடியவில்லை. எனது அபிப்பிராயம் சாதாரண வழக்கறிஞர் ஒரு பிரபல பிரமுகரை நியமித்தால் அவர் ஒழுங்காகக் கடமையாற்றுவாரென்பது தான். அத்துடன் நான் முக்கியமாய் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். பல முஸ்லிமல்லாதவர்கள் முஸ்லிம்களின் திருமணச் சட்டத்தை எப்படியோ பிரயோகித்துப் பல திருமணங்கள் செய்கிருர்கள். இதற்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் இருக்கிறது என்ருர்

செனட்டர் திரு. எம். திருச்செல்வம் பேசுகையில் இது ஒரு மிக முக்கியமான மசோதா இந்தத் திருத்த மசோதாவில் ஒரு பிரிவைத் தவிர மற்றெல்லாவற்றையும் நான் ஆதரிக்கிறேன்

அதசவது காதிமார்களை நியமிக்குமதிகாரத்தை இம்மசோதா நீதி பரிபாலனக் குழுவிடம் ஒப்படைத்துள்ளது. இம்முறை சரியானடன் ஒரு குறிப்பிட்ட காதியினுல் விசாரிக்கப்பட விரும்பாத ஒருவருக்கு இன்னுமோர் காதியை நியமிப்பதற்கு வசதியளிக்கப் படவேண்டும். இவற்றை நான் ஒரு எதிர்க்கட்சி அங்கத்தவனென்ற முறையிலோ அன்றி ஒரு வழக்கறிஞனென்ற முறையிலேயோ கூறவில்லை இந்தச் சபையில் நான் ஓர் உறுப்பினர் என்ற முறையிலேயே கூறுகிறேன் ஆகவே இம்மசோதாவை மறுபடியும் பரிசீலனைக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்

உறுப்பினர்களது அபிப்பிராயங்களுக்கெல்லாம் பதிலிறுத்துப் பேசிய செனட்டர் திரு எ எவ் விஜயமானே இப்போதைய அரசாங்கம் தனிப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதிக்கும் சட்டங்களையும் குற்றங்களையுடைய பிற்போக்குச் சட்டங்களையுமே எதிர்த்து வந்திருக்கிறது இனிமேலும் அப்படியானவற்றை நாம் எதிர்ப்போம் என்ருர்

காதிமார்கள் நியமிக்கும் விடயமாய்க் கூறியபோது செனட்டர் திரு எம் திருச்செல்வத்தின் கூற்றை ஆதரிக்க முடியாதென்ருர் இனிமெல் நீதி பரிபாலனகுழுவே காதிமாரை நியமிக்கும் நண்பர் கூறும் இவ்வாலோசனையை ஏற்பதாயின் இது கால தாமதத்திற்கும் பண செலவிற்கும் தான் வழி வகுக்குமென்ருர் பணச்செலவை தவிர்ப்பதற்காகதே தான் காதிமுறை நடைமுறையில் கொண்டு வரப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்

அவர் தொடர்ந்து பேசுகையில், திருத்தங்களோடு தொடர்பற்ற சில விடயங்களும் இங்கு கிளப்பப்பட்டது சிலர் முஸ்லிம் விவாகச் சட்டங்களை மாற்றவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள் ஆனுல் அந்தச் சமூகம் விரும்பினுலொளிய அவர்களின் சட்டதிட்டங்களில் அரசாங்கம் குறுக்கிடாது என்ருர்

சிலர் ஒரு முஸ்லிம் பல மனைவி மார்களை வைத்திருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள் ஆனுல் அதற்கும் இம்மசோதாவிற்கும் எவ்வித தொடர்புமில்லை என்றும் அவர் கூறினுர்

முஸ்லிம் திருமண, விவாகரத்துத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது.

இதைத் தொடர்ந்து கொந்தராத்துக் கமிஷன் திருத்த மசோதாவும் நிறைவேற்றப்பட்டது

செனட்சபை இம்மாதம் 18-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது


தற்பொழுது
விற்பனையாகின்றது

ஈழநாடு
தினக் குறிப்பு
1970
(வழமையானது)

சென்ற வருடங்களிலும் கூடிய தகவல்களுடன் அழகாக அச்சிடப்பட்டுள்ளது.

விலை ரூ. 1-35 சதம்

எமது பத்திரிகை விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

1864


...செலுத்திய சாரதி

கோட்டை சனி வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஒரு இரட்டைத் தட்டு பஸ்ஸைத் தனது வீட்டுக்கு ஓட்டிச் சென்ற இ. போ. ச. சாரதியொருவர் மஹாரகம பொலிசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாபபஸ்சாரதி தான் வீடுசெல்வதற்கு பஸ்சுக்குக் காத்து நின்றதாகவும் பின்னர் வீதியில் நின்ற பஸ்ஸைக் கண்டதும்அதைச் செலுத்திக்கொண்டு தனது வீடு சென்றதாகவும் கூறப்படுகிறது. இது சம்பந்தமாகப் பொலிசார் மேலும் விசாரணை நடாத்துகின்றனர்.

...லம் பேசும் ஜூரர்கள் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டபோது பி. ஜெயசேன என்பவர் சாட்சியமளிக்கையில் கூறினுர்;

நீதியரசர் திரு... ரி. பண்டித குணவர்த்தன முன்னிலையில் நடைபெற்ற இவ்வழக்கு விராரணையில் முடிக்குரிய வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

இந்த இரட்டைக் கொலை வழக்கில் ஈ அல்பிரட் சொய்சா, களுஅல்பேர்ட் என் . வில்லியம் பெர்ணண்டோ (லில்லிமாமா) ஆகியோர் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர்.

விசாரணை தொடர்ந்துநடைபெறுகிறது,

# இன்றைய பலன்

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

கார்த்திகை மாதம் 22-ம் திகதி (7-12-69)

**மேஷம்**- சிறியவிடயம்கூட இன்று சிரமமாகத் தோன்றும். உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும். வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். திருப்தியற்ற தினம்,

**ரிஷபம்**- களஸ்திரவழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறும். நீண்டநாள்பகை இன்று நிவர்த்தியாவதற்கு இடமுண்டு. காதலர்கள் வாழ்க்கையில் பிணைப்புக்கள் இறுகும். மதிப்பும் உயரும். நல்லநாள்.

**மிதுனம்**- ஏமாற்றம்தாக்கும். எதிலும் தயக்கநிலை தென்படும். செய்தொழில் மூலம் நஷ்டம் ஏற்படலாம். செலவினங்களைக்கட்டுப்படுத்திக்கொள்ளவும். நண்பர்களால் தொல்லைகள் தோன்றக்கூடும்.

**கடகம்**- புண்ணிய விருப்புக்களில் ஆர்வம் பிறக்கும். பொதுத்துறைகளில் புகழ்பரவும். பெரியோர்களுடைய உதவிக்கும் இடமுண்டு. கொண்டகொள்கையில் அகதி உறுதிப்பபாடுதென்டும். சிறப்பானதினம்.

**சிம்மம்**- புதிய முயற்சிகளில் ஆர்வம் தோன்றக்கூடும். வியாபாரிகளுக்கு இலாபகரமானதினம். புதிய தொடர்புகள் மூலம் முன்னேற்றம் ஏற்படும். தெய்வத்தின் துணையும் தப்பாமல் கிடைக்கும்.

**கன்னி**- பொருளீட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர்கள். எதையும் சிறப்பாகச் சாதிப்பதில் முதலிடத்தைப்பெறுவீர்கள். மக்களாலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. சிலருக்கு உத்தியோகஉயர்வும் கிடைக்கும்.

**துலாம்**- சிந்தனை புதிர்போடும். சீறிவரும்கோபம் பெரியவர்களைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். தொழில்துறையில் புதிய கவலைகள் தோன்றக்கூடும். தெய்வநம்பிக்கை சிறந்த பயன்தரும்.

**விருச்சிகம்**- ஆசைஅலைகள் மோதும். வாழ்க்கையில் நிம்மதியற்றநிலை தென்படும். ஆணவப்போக்கினுல் பிறருடைய பகையைச் சம்பாதித்துக்கொள்ள நேரிடும். மனவடக்கம் விரும்பத்தக்கது.

**தனுசு**- குடும்பநலனில் புதிய உற்சாகம் பிறக்கும். உறவுமுறைகளில் அபிவிருத்தி காணப்படும். அமைதியுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள். வசீகரப்பேச்சு வெற்றியைத் தேடித்தரும்.

**மகரம்**- பேராசையின் மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள். இதனுல் விபரீதங்கள் தோன்றக்கூடும். மறைமுக எதிர்புக்களைச் சமாளிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம். முன்னெச்சரிக்கை நன்று.

**கும்பம்**- ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் தோன்றும். வாகனத்தின்மூலம் அதிக பொருள்வரவுக்கு இடமுண்டு. விளைபொருள்விருத்தியும், வியாபார முன்னேற்றமும் ஏற்படும். நல்லநாள்.

**மீனம்**- அறவழிகளில் மனநாட்டம் செல்லும். தாராளமனப்பான்மையின்மூலம் பணமும் செலவாகும். இளையபிள்ளையால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு மனைவாழ்க்கையிலும் சுவையான சம்பவங்கள் இடம்பெறும்.


வின்ஸா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
தென்னகத் திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
எதிர் நீச்சல்

இரவு 9-45 க்கு மட்டும்
எம் ஜி ஆர் -பானுமதி
நடித்த
மதுரை வீரன்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-கே.ஆர்.விஜயா
நாகேஷ்
நடித்த
தங்கை

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம் ஜி,ஆர்.-ராஜசுலோசன
நடித்த
நல்லவன் வாழ்வான்

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
SPREE

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,9-30
பிரிபோயா,போயா 2-30மணி
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க நீடிக்கப்பட்டுள்ளது.
எம்.ஆர்.ராதா-எஸ்.எஸ்.ஆர்.
நடித்த
இரத்தக்கண்ணீர்
[புதிய கொப்பி]

REGAL JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m
Poya, Pre-Poya 4 shows
George Setall,
Santa Dardar
in
QUILLER MEMORANDUM

MANOHARA
Daily 4-45,7&9-45,P. M
Poya, Pre-poya 4 shows
Shirley Macmaile,
Richard Attelborough
James Booth
in
THE BLISS OF MRS BLOSSOM

...வுக்கு எம்மிடம் இருக்கின்றன.

உங்கள் தேவையை உடனடியாக எம்மிடம் பெற்றுக்கொள்ளவும்.

இந்நிலைபரம் நிலையானதல்ல. தங்கள் தேவைக்கு முந்துங்கள்.

பெரிய "வில்லியேர்ஸ் ஈசிப்பிறைம்" ரூபா. 2280/-
சிறிய "வில்லியேர்ஸ் ஈசிப்பிறைம்" ரூபா. 1550/-
சிறிய "வில்லியேர்ஸ் சிக்மன்ட்" ரூபா. 1550/-

வடபகுதி விவசாய உற்பத்தியாளர்
கூட்டுறவுச் சமாசம்
111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ராணி (யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெமினி - சரோஜாதேவி
எஸ்.எஸ் ஆர்.-ராஜசுலோஜன
நடித்த
குலவிளக்கு

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ரவிச்சந்திரன்—கே ஆர். விஜயா
நடித்த
நினைவில் நின்றவள்

கிங்ஸ்லி [கொழும்பு]
பிளாஸா [வெள்ளவத்தை]
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
(விரைவில் வருகிறது]
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
பிரிபோயா, போயா 4 காட்சிகள்

ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்
★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே ஆர்.விஜயா
★ நாகேஷ் ★ மனேரமா
நடித்த
திருவருட் செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்யூனிஸ்ட் நாடுகளுடன் மேற்கு நாடுகள் ஒத்துழைக்கும் வாய்ப்பு

## வார்சா, நேட்டோ மகாநாடுகளின் பயன்

பிரஸ்ஸல்ஸ், டிச 6

ஐரோப்பாவில் நெருக்கடி நிலையைத் தணிப்பதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சிகளையும் பிரஸ்ஸல்சில் கூடிய வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் மந்திரிகள் வரவேற்றிருக்கின்றனர்.

மேற்கு நாடுகளுடன் நல்லுறவை வளர்ப்பதென மாஸ்கோவில் கூடிய வார்சா ஒப்பந்த நாடுகளின் மகாநாட்டு முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. வார்சா ஒப்பந்த நாடுகளின் இந்த நட்புறவுத் தீர்மானத்தை வட அத்லாந்திக் ஒப்பந்த நாடுகளின் அமைச்சர்கள் வரவேற்றிருப்பதுடன் ஐரோப்பாவில் நெருக்கடி நிலையைத் தணிக்கும் எந்த முயற்சிக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் அளிப்பதெனவும் முடிவுசெய்திருக்கின்றனர்.

சோவியத் யூனியனும் மற்றும் ஆறு சோஷலிஸ நாடுகளும் அங்கம் வகிக்கும் வார்சா ஒப்பந்த ஸ்தாபனமும் அமெரிக்காவும் மற்றும் மேற்கத்திய அரசுகளும் அங்கம் வகிக்கும் வட அத்லாந்திக் ஒப்பந்த ஸ்தாபனமும் ஐரோப்பாவில் நெருக்கடியைத் தணிப்பது சம்பந்தமாக ஒருமித்த கருத்துக் கொண்டு ஒத்துழைக்க விருப்பம் தெரிவித்திருப்பதால் விரைவில் கிழக்கு மேற்கு அரசுத் தலைவர்களுக்கிடையில் பேச்சுவார்த்தை நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

என்றாலும் இந்தச் சந்திப்புக்கு முன்னர், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்பன போன்ற சில கொள்கைகளைத் தெளிவாக்கிக்கொள்ள வேண்டியது அவசியம்என நெட்டோ அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

## கொலை வெறியன் கோடரிக்கு 7 பேர் பலி

கால்கி, டிச 6

வட இந்தியாவில் துர்க்கா பூமிக்குச்சமீபத்தில்கால்கி என்றஇடத்தில் திடீரென வெறி பிடித்த ஒருவன் வழியில் கண்டவர்களைத் தன் கோடரியால் வெட்டிக் கொலை செய்தான். இவனின் கொலைவெறிக்கு ஓர் ஆணும் நான்கு பெண்களும் குழந்தைகளுமாக 7 பேர் பலியாகினர்.

பின்னர்கால்கி பொலிஸ் நிலையத்துக்குள் இவன் நுழைய முயன்ற போது பொலிஸ் நிலையக் காவலாளியால் சுட்டுக் கொல்லப்பட்டான்.

## 3 இஸ்ரேல் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

### இப்படி எகிப்தியர் கூறுவதை இஸ்ரேல் மறுக்கிறது

கெய்ரோ, டிச 6

சூயஸ்கால்வாயின் தெற்குப்பகுதியில் நேற்று மூன்று இஸ்ரேலிய போர்விமானங்களைத் தாங்கள் சுட்டுவீழ்த்தியதாக ஐக்கிய அரபுக்குடியரசு இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

மற்றொரு இஸ்ரேலிய விமானம் சூயஸ்கால்வாயின் கிழக்குக் கரைப்பகுதியில் விழுந்து நொறுங்கியதாகவும் அவர்கள் தெரிவித்தனர். தங்கள் இராணுவ நிலைகளைத் தாக்கவந்த இஸ்ரேலிய விமானங்கள் இவையென்றும் அவர்கள் கூறினர்

லியர் அறிவித்தனர். இஸ்ரேலிய விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாக எகிப்தியர் கூறியதை அவர்கள் மறுத்தனர்.

### கைதிகள் பரிமாற்றம்

மேற்கு ஆசியாவில் இஸ்ரேலியருக்கும் அரபுநாடுகளுக்குமிடையில் நடந்த யுத்தத்தின்போது இருதரபபிலும் சிறைப்பிடிக்கப்பட்ட கைதிகளில் சிலர் இன்று சூயஸ்பகுதியில் பரிவர்த்தனைசெய்துகொள்ளப்பட்டனர். இரண்டு இஸ்ரேலிய

## அண்ணாமலை மாணவர்கள் எதிர்ப்பூர் வலம்

சிதம்பரம், டிச. 6

கோவை விவசாயக் கல்லூரி மாணவர்கள் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். அவர்களில் அன்றைய தினம் எவரும் வகுப்புக்குச் செல்லவில்லை.

## சுப்பிரமணியம் அமைச்சராகலாம்

# அண்ணாவின் வாழ்க்கை திரைப்படமாகிறது

## இந்திய மத்திய அரசு இதனைத் தயாரிக்கிறது

புதுடில்லி, டிச. 6

காலஞ்சென்ற தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணாவின் வாழ்க்கை வரலாற்றை டில்லி மத்திய அரசு திரைப்படமாகத் தயாரித்துள்ளது.

ஏற்கனவே புகழ்பெற்ற தலைவர்களாகிய காந்தி, நேரு, திலகர், லால்பகதூர் சாஸ்திரி, லஜபதிராய் ஜாகீர் உசேன், முன்னாள் ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் ஆகியோரது செய்திப்படங்களை உருவாக்கியுள்ள டில்லி மத்திய அரசு செய்தி சினிமாத்துறை இலாகாவினரால் தயாரிக்கப்பட்ட அண்ணா பற்றிய இப்படம் இந்தியா முழுவதும் திரையிடப்படவிருக்கிறது.

இத்திரைப்படத்தில் அண்ணா முதலமைச்சராக இருந்த பொழுது கலந்து கொண்ட முக்கிய நிகழ்ச்சிகளும், உள்ளத்தை உருக்கும் அவரது இறுதி ஊர்வலக் காட்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

### தமிழக இடைத்தேர்தல்கள்

## "முனுசாமியின் சேவை குறளுக்குத்தான் தேவை"

— என். வி. நடராசன்

விழுப்புரம், டிச-6

'திருக்குறள் முனுசாமி திருக்குறளில் புலமையுள்ளவர். எனவே அவரதுசேவை திருக்குறள் வகுப்பு நடத்த பயன்பட வேண்டுமே யொழிய அரசியல் நடத்த வல்ல.

இவ்வாறு தமிழ்நாடு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் என் வி. நடராசன் முகையூர் இடைத்தேர்தலில் தி.மு க வேட்பாளராகப் போட்டியிடும் பத்மாவதி அம்மாளை ஆதரித்து நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அமைச்சர் என்.வி. நடராசன் தொடர்ந்து பேசுகையில் தி.மு.க தான் காந்தீய வழியில் . . . கொள்கைகளை . . . . உடைந்து கிடக்கும் காங்கிரஸில் எந்தக் காங்கி . . . திலும் சொல்லவில்லையென்று கூறினர்.

திரு ஜி. குருமூர்த்தி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. ......

## ஆந்திராவில் ரொககட் தளம்

ஹைதராபாத், டிச. 6

ஆந்திராவில் ஸ்ரீஹரிகோட்டா என்ற இடத்தில் அமைக்கப்படும் ரொக்கட் தளம் உலகிலேயே மிகச்சிறந்த ரொக்கட் தளங்களில் ஒன்ருக விளங்குமென்று இந்திய அணுசக்திக்கமிஷன் தலைவர் விக்ரம் சாரபாய் தெரிவித்தார்.

கேரளத்திலுள்ள தும்பா ரொக்கட் தளத்தைவிட ஸ்ரீஹரிகோட்டா ரொக்கட் தளம் மிகப் பெரிதாக இருக்குமென்றும், பெரிய ரொக்கட்டுகளையும், செயற்கைக்

## மனித உரிமை இயக்க கிளை

உடுப்பிட்டி, சனி

அகில இலங்கை மனித உரிமை இயக்கக் கிளையொன்று வடமராட்சியில் 27ந் திகதி திறந்துவைக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது. அகில இலங்கை மனித உரிமை இயக்கத்தின் தலைமைப்பீடம் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்யுமுகமாக நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்படி இயக்கத்தின் முக்கிய பிரமுகர்கள் சிறுபான்மைச் சமூகத்தவர்கள் வசிக்கும் இடங்களுக்கெல்லாம் வீடுவீடாகச் சென்று இயக்கத்திற்கு ஆதரவுதேடும் முகமாகத் தங்கள் கொள்கைகளை மக்களுக்கு விளக்கி வருகின்றனர்.

## காரியாலய தொலைபேசி களவாடப்பட்டது

கம்பளை, சனி

போக்குவரத் தமைச்சரின் நிரந்தரக் காரியதரிசியும் கம்பளை ஆட்சிமன்ற அங்கத்தவருமான திரு. எல். பி. தஸநாயக்காவின் காரியாலய தொலைபேசி திங்கட்கிழமையன்று களவாடப்பட்டுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது

ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் காரியாலயத்தின் பின்புறமாகச் சென்று பின்புறக் கதவை உடைத்து தொலைபேசியைத் களவாடியுள்ளதாகவும் பொலீசார் சந்தேகிக்கின்றனர். இக் கூட்டத்தினர் காரியாலயத்திலுள்ள பல தளபாடங்களையும் உடைத்துச் சேதப்படுத்தியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'பிராமணருக்கு ஒரு தொகுதி வேண்டும்'

கோப்பாய், சனி

இந் நாட்டில் சிறுபான்மைச் சமூகத்தவராகவும் சைவ மக்களுக்கு குருவாகவும் விளங்கும் பிராமணர்களுக்கு அவர்களது சுய நிர்ணய உரிமைகளைப் பெற அவர்களுக்கும் ஆட்சி மன்றப் பிரதிநிதித்துவத்துக்கென ஓர் தொகுதியைதமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் ஒதுக்கித்தரல் அவசியம்'

மேற்படி பகிரங்கவேண்டுகோள் அகில இலங்கைச் சைவ அனுட்டான பாது

## தலைமைஆசிரியரும் மனைவியும் செய்துள்ள முறைப்பாடு

மட்டுவில், சனி

''பாடசாலை முடிந்து வீடு நோக்கி வந்துகொண்டிருக்கும்போது எங்களை இருவர் வழிமறித்துத் தாக்கி மிரட்டியதுடன், என் மனைவியின் கழுத்திலிருந்த தாலிக்கொடியிலும் கை போட்டு அறுக்க முயன்றனர். ஆனால் தாலிக்கொடி அறுபடவில்லை.''

இவ்வாறு சாவகச்சேரியைச் சேர்ந்த கெருடாவில் சரஸ்வதி வித்தியாசாலைத் தலைமையாசிரியரும், அவர் மனைவியும் சாவகச்சேரிப் பொலிஸ்நிலையத்தில் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர். இந்த முறைப்பாட்டில் அவர்கள் மேலும் கூறியுள்ளதாவது:

''சென்ற திங்கட்கிழமை பிற்பகல், பாடசாலை முடிந்து பாடசாலையிலிருந்து வீதிக்கு வந்து சுமார் 5 யார் தூரம் வரை வந்திருப்போம். அப்பொழுது இருவர் எம்மை வழிமறித்துத் தாக்கி மிரட்டியதுடன், எனது மனைவியின் தாலிக் கொடியையும் அறுக்கமுயன்றனர். நாமிருவரும் பயந்து ஒரு லொறியில் ஏறி, வேறு வழியால் பொலிஸ்நிலையத்திற்கு வந்து சேர்ந்தோம். எமக்குத் தொடர்ந்து பாடசாலைக்குச் செல்லப் பயமாக இருக்கிறது. எமக்குத்தகுந்த பாதுகாப்பளிக்க வேண்டும்'' என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

சாவகச்சேரி சப்-இன்ஸ்பெக்டர் திரு. ஜெயசூரியாவும், பொலிஸ்கான்ஸ்டபிள் திரு. சில்வாவும் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர். இதுசம்பந்தமாகப் பொலிஸார் தொடர்ந்து புலன்விசாரணை செய்துவருகிருர்கள். இதுவரை சந்தேகத்தின்பேரில் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இதுபற்றிக் குறிப்பிட்ட தலைமையாசிரியரும், அவர் மனைவியும் சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினருக்கும், யாழ்ப்பாணக் கல்விக் கந்தோர் அதிகாரிகளுக்கும் முறையிட்டதாகவும் தெரியவருகிறது.

# திருமலைச் செய்திகள்

— நமது நிருபர் எஸ். நவரத்தினம் —

### சென்னை-திருமலை மோதல்

எதிர்வரும் 15-ம் திகதி சென்னை உதைபந்தாட்டக் கோஷ்டியும் திருமலை தெரிவுக் கோஷ்டியும் திருமலை ஸ்ரேடியத்தில் மோதவிருக்கின்றது.

தலைநகரில் தங்கியிருக்கும் சென்னைக் கோஷ்டி மட்டுநகர் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் மோதிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

### முயற்சி

திருமலை பொது நூலகத்துக்கு 10,000 ரூபா பெறுமதியான தமிழ் நூல்களைத் தருவிப்பதற்கு திருமலை நகரசபை முயற்சி எடுத்துவருகின்றது.

### அபராதம்

சட்டத்துக்கு விரோதமாக 20 கூப்பன் புத்தகங்களை அடைவுபிடித்து வைத்திருந்த ஹனிபா என்பவருக்கு திருமலை நீதவான் திரு. விக்கிரமசேகரா 500 ரூபா அபராதம் விதித்தார்

### பூங்காவனம்

திருமலை கடற்கரை பிருந்

புகார் செய்யப்பட்டுள்ளது.

இவர்களிருவரும் மயக்க நிலை அடைந்து வீதியில் கிடந்ததாகவும், பின்னர் பொலிசுக்குச் சென்றதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புகார் பற்றி அரசாங்க அதிபர்

கிண்ணியாபகுதி விவசாயிகள் இம்முறை விவசாயக் கடன் பெறமுடியாமல் போனதையிட்டு மிகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது பற்றி திருமலை அரசாங்கஅதிபரிடம் நமது நிருபர் கேட்டபோது, 1969-70ம் ஆண்டுக்கான பெரும்போக விளைச்சலுக்கு விவசாயக்கடன் பெற விரும்பி விண்ணப்பித்தவர்களுக்கு கடன்வழங்கப்பட்டதாகக் கூறினர்.

கிண்ணியாவிலுள்ள 700க்குமதிகமான விவசாயிகள் கடன்பெறுவதற்கு உரியவர்கள் என இப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அத்தாட்சிப்படுத்தவில்லை என்று அவர் சொன்னர்.

### 'மாணவர் கடமை'

ஊரதீவு சனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குக் கரைப்பகுதியில் விழுந்து நொறுங்கியதாகவும் அவர்கள் தெரிவித்தனர். தங்கள் இராணுவ நிலைகளைத் தாக்கவந்த இஸ்ரேலிய விமானங்கள் இவையென்றும் அவர்கள் கூறினர்

தங்கள் போர்விமானங்கள் மூன்று தனித்தனியே சூயஸ்கால்வாய்ப் பகுதிக்குச் சென்று ஐக்கிய அரபுக் குடியரசு இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் திரும்பியதாக இஸ்ரேலுக்குமிடையில் நடந்த யுத்தத்தின்போது இருதரப்பிலும் சிறைப்பிடிக்கப்பட்ட கைதிகளில் சிலர் இன்று சூயஸ்பகுதியில் பரிவர்த்தனைசெய்துகொள்ளப்பட்டனர். இரண்டு இஸ்ரேலிய விமானிகளை இஸ்ரேலியரிடம் எகிப்தியர் ஒப்படைத்தனர். இவர்களுக்குப் பதிலாக 15 எகிப்தியரை இஸ்ரேலியர் எகிப்தியரிடம் ஒப்படைத்தனர்.

# நாவலர் லட்சியம் நிறைவேற இருமன்றங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''சித்தாந்த சைவநெறி தமிழர் தம் தனி நெறி. பெரியபுராணம் கண்டநெறி கந்தபுராணம் காட்டிய நெறி, திருமுறைகள் கொண்ட நெறி. இதற்காகவே நாவலர் பெருமான் அவதரித்தார். நாவலர்பெருமானுக்கும் சைவசித்தாந்தத்திற்குமுள்ள பிணைப்பை உலகிற்கு எடுத்துரைக்க நாவலர்பெருமான் சித்தாந்த சைவமன்றம் ஒன்றும் கந்தபுராணசபையும் முக்கியம்என வடமாகாணச் சைவ இளைஞர் மாமன்றக் கூட்டம் திரு. வை. இரகுநாதமுதலியார் தலைமையில் கூடியபொழுது வித்துவான் சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

சைவபரிபாலனசபைநாவலர் மண்டபத்தில் நாவலர் குருபூசைக்கு முதல் நாள் இக்கூட்டம் நடைபெற்றது நாவலர் பெருமான் சித்தாந்த சைவமன்றத் தலைவராக திரு வை இரகுநாத முதலியாரும் காரியதரிசியாக வித்துவான் சைவப் புலவர் க கணபதிப்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர். கந்தபுராண சபைக்கு தலைவராக சைவப்புலவர் வ: கந்தசாமியும், காரியதரிசியாக வித்துவான் க. கணபதிப்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர். உடனடியாக இரு மன்றங்களையும் விஸ்தரிப்பது எனவும் முடிவாயிற்று. சைவ பரிபாலன சபையினதும் வடமாகாண சைவ இளைஞர் மாமன்றத்தினதும்ஆதரவுடன்இம்மன்றங்கள் இயங்குவதெனவும் முடிவாயிற்று

# 'கதைகேட்டுக்கொண்டிருந்தபோது தாலிக்கொடியை அறுத்தார்'

மட்டுவில், சனி

நான் என் தந்தையின் வீட்டிலிருந்து, சுதுமலையிலுள்ள எனது வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கும் போது. செல்லம்மா என் பெயரைச்சொல்லி என்னைக் கூப்பிட்டார். நான் நின்று கதை கேட்டபோது, அவர் என்னை அடித்து, என் தாலிக் கொடியையும் அறுத்துக் கொண்டு, அடுத்த வளவிற்குள் ஓடினுர்.

மட்டுவில், தாலிக்கொடி அறுத்த வழக்கில் சாட்சியமளித்த பொன்னுத்துரை பெண் கண்மணி, தனது சாட்கியத்தின்போது மேற்கண்டவாறு கூறினுர்.

மட்டுவில் வடக்கு வாசியான செல்லையா பெண் செல்லம்மா என்பவர், சுதுமலை வாசியான பொன்னுத்துரை பெண் கண்மணி என்பவரை அடித்து தாலிக் கொடியையும் அறுத்ததாக குற்றம் சாட்டி சாவகச்சேரி பொலீசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை, சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா விசாரணைக்கு எடுத்துக் கொண்டார்.

விசாரணையின் போது சாட்சியமளித்த மண்மணி தொடர்ந்து கூறியதாவது.

''சம்பவதினம் நான் மட்டுவிலிலிருந்த எனது தந்தையைப் பார்த்து விட்டு, எனது ஊரான சுதுமலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ரேட்டில் நின்ற செல்லம்மா என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார் நானும்போனேன் உடனே அவர் 'அன்று ஏதோ சொன்னியாமெடி' என்று கூறியபடி என் கன்னத்திலடித்து என் தாலிக் கொடியையும் அறுத்துக் கெகண்டு ஓடினுர். அப்பொழுது அவரின் நாய் என்னைககடிகக வந்தது. நான் நாயைத் துரத்தினேன் அதற்குள் கண்மணி தாலிக கொடியுடன் அடுத்த வளவிற்குள் ஓடிவிட்டார்.

மாஜிஸ்திரேட் இந்தவழககின் மேல் விசாரணையை இந்த மாதம் 31 ம் திகதி வரை ஒத்தி வைத்தார்.

ரும் வகுப்புக்குச் செல்லவில்லை.

— —

## சுப்பிரமணியம் அமைச்சராகலாம்

புதுடில்லி, டிச. 6

பிரதமர் இந்திரா காந்தி டில்லி மந்திரிசபையை மாற்றியமைக்கத் திட்டமிட்டிருக்கிருர். மாற்றியமைக்கப்படும் இம் மந்திரிசபையில் தற்போது அகில இந்தியக் காங்கிரஸ்கட்சியின் இடைக்காலத் தலைவராக இருக்கும் சி சுப்பிரமணியமும் அமைச்சராகலாம் என நம்பப்படுகிறது.

'சிண்டிக்கேட்' ஆதரவாளர்களான பல அமைச்சர்கள் ஏற்கனவே அமைச்சர் பதவிகளில் இருந்து ராஜினமாச் செய்தது தெரிந்ததே. இவர்களுக்குப் பதிலாகப் புதிய அமைச்சர்களை நியமிக்கவேண்டியிருப்பதால் மந்திரிசபையை மாற்றியமைப்பது குறித்து இந்திரா ஆலோசனை நடத்திவருகிருர். இப்புதிய அமைச்சர் பதவிகளில் ஒன்றை திரு. சி. சுப்பிரமணியத்திற்குப் பிரதமர் அளிக்கத் திட்டமிட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

— —

## 'பத்தாண்டில் பயகரநிலை'

புதுடில்லி, டிச. 6

'பூமியின் இயற்கை வளம் நாள்தோறும் குறைந்து கொண்டேவருகின்றது. இந்நிலையில் நிமிடத்திற்கு நிமிடம் உலக ஜனத்தொகை தீவிரமாக அதிகரித்துவருகின்றது. இதனுல் தன்னைத் தானே சீராக ஆட்சிசெய்யும் வல்லமையை மனிதன் இழந்துவிடக்கூடிய பயங்கரமான சூழ்நிலை விரைவில் உருவாகலாம்'

சர்வதேச இயற்கைவள பாதுகாப்பு நிறுவனத்தின் தலைவரான கலாநிதி ஹரோல்ட் ஜே. கூலிட்ஜ், இவ்வாரம் புதுடில்லியில் நடைபெற்ற மாநாடொன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமெரிக்காவிலும் உலகின் இதர பாகங்களிலும் ஜனத்தொகை அதிகரித்துவரும் வேகத்தினுல் ஏற்படக்கூடிய பலாபலன்களை. புள்ளி விபரங்களோடு ஆராய்ந்து வரும் கலாநிதி கூலிட்ஜ் ஜனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாவிடில் இன்னும் பத்தாண்டு காலத்துள் ஏற்படக்கூடிய சொல்லொணுக் கஷ்டங்களை மக்கள் சமுதாயம் அனுபவித்தே ஆக வேண்டுமென மேலும் எச்சரித்துள்ளார்.

அமைச்சர் என். வி. நடராசன் தொடர்ந்து பேசுகையில் தி. மு. க தான் காந்தீய வழியில் நடக்கிறது அவரது கொள்கைகளைப் பின்பற்றுகிறது. உடைந்து கிடக்கும் காங்கிரஸில் எந்தக் காங்கிரஸ் உண்மையான காங்கிரஸ் என்று மக்களுக்குப் புரியவில்லை, முக்கியமாக மூனுசாமியே, தான் எந்தக் காங்கிரஸ்என்று எந்தஇடத்

## இலங்கை வைத்தியருக்கு உபகாரநிதி

லண்டன், டிச. 6

பிரிட்டனின் பிரபல வைத்தியப் பொறியியல் நிறுவனமான 'ஸிமித் அன்ட்நெபியூ' கம்பனி, இம்முறை இலங்கையர் ஒருவர் உட்பட ஆறு வைத்தியர்களுக்கு உபகார நிதிச் சலுகை வழங்கியுள்ளது. இலங்கையிலிருந்து டாக்டர் எஸ் இராமச்சந்திரன் இவ்வாண்டின் உபகார நிதிபெற்று பிரிட்டனுக்கு சென்றிருக்கிருர்.

— —

## பின் தங்கியநாடுகளுக்கு உதவி அதிகரிக்கும்

லண்டன், டிச 6

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு பிரிட்டன், தனது உதவியை பெருமளவில் அதிகரிக்க உத்தேசித்துள்ளது. பிரிட்டிஷ்வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் திருமதி ஜுடித்ஹாட் இத்தகவலை பிரிட்டிஷ் மக்கள் சபையில் அறிவித்தார்.

1970-71ம் ஆண்டில் பிரிட்டன் 23 கோடி 50 லட்சம் பவுண்களை மொத்த வெளிநாட்டு உதவியாக வழங்க விருப்பதாகவும் இவ்வுதவி அடுத்த ஆண்டு, அதாவது 1971-72-ல் 24 கோடியே 50 லட்சம் பவுண்களாக அதிகரிக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார். 1972-73-ல் மொத்த வெளிநாட்டு உதவி 26 கோடியே 50 லட்சம்பவுண்களாகவும், 1973-74ல் 30 கோடி பவுண்களாகவும் மேலும் அதிகரிக்கப்படுமென அவர் தொடர்ந்து கூறினுர்.

பிரிட்டன், உள்நாட்டில் பொருளாதார சங்கடங்களைச் சமாளிக்கவேண்டியிருப்பினும், தொடர்ந்து அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு பெருமளவில் உதவியளிக்க உறுதி பூண்டிருப்பதாகஅவர்எடுத்துரைத்தார்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் உலக வறுமையைப்போக்கடிப்பதே பிரிட்டனின் இலட்சியமென்றும் மனித நோய் பிணிக்கும், பசிக்கும் தேசிய எல்லை என்ற வரையறுப்புகள் இல்லையெனவும் எடுத்துரைத்தார்.

தெரிவித்தார்.

கேரளத்திலுள்ள தும்பா ரொக்கட் தளத்தைவிட ஸ்ரீஹரிகோட்டா ரொக்கட் தளம் மிகப் பெரிதாக இருக்குமென்றும், பெரிய ரொக்கட்டுகளையும், செயற்கைக் கிரகங்களையும் விண்வெளிக்கு அனுப்பக்கூடியதாக இருக்குமென்றும் அவர் சொன்னுர் காற்றுமண்டலம் மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு இத்தளம் பயன்படும்.

......

## மே. வங்கத்தில் மாற்றம் இருக்காது

கல்கத்தா, டிச. 6

மேற்கு வங்காளத்தில் ராஷ்டிரபதி ஆட்சியோ, மாற்று மந்திரிசபையோ ஏற்படக்கூடிய வாய்ப்பு இப்போது இல்லை என்று மேற்கு வங்க முதல் அமைச்சர் அஜோய் முக்கர்ஜி தெரிவித்திருக்கிருர்.

தமது பங்களா காங்கிரஸ் கூட்டு முன்னணி அரசாங்கத்திலிருந்து விலகினுலும் கூட்டணிக்கு ஆட்சிபீடத்தில் தொடர்ந்திருக்கக்கூடிய பெரும்பான்மை பலம் இருப்பதாகவும் அவர் கூறினுர்.

......

## புளூ தொல்லை

ரோம், டிச. 6

இத்தாலியில் இன்புளூவன்சா எனப்படும் சளிச்சுரத்தினுல் பெருந்தொகையானேர் பீடிக்கப்பட்டு அவதிப்படுகிருர்கள். லட்சக்கணக்கானேரை இந்நோய் பீடித்திருப்பதால் அலுவலகங்கள், வர்த்தக நிலையங்களிலும் அலுவல்கள் நடைபெறவில்லையாம்.

— —

## 7 பேர் பிணையில்

மட்டுவில், சனி

சூது விளையாட்டில் ஈடுபட்டிருந்த ஏழுபேரை சாவகச்சேரிப் பொலிசார் பிடித்துப் பிணையிற் செல்ல அனுமதியளித்தனர்.

சாவகச்சேரியில் ஏழுபேர் கொண்ட கோஷ்டியொன்று ஒரு கடையின் பின் புறத்தில் சூது விளையாடுவதாகக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து சாவகச்சேரிப் பொலிசார் ஸ்தலத்துக்கு சென்று அவர்களைப் பிடித்துக்கொண்டனர்.

இதைத் தொடர்ந்து இவர்கள்மீது ஒரு வழக்கை பதிவு செய்து கொண்ட சாவகச்சேரிப் பொலிசார் இவர்களை சரீரப் பிணையிற் செல்ல அனுமதி வழங்கியதுடன் இந்த ஏழுபேரையும் இம்மாதம் 6-ம் திகதி சாவகச்சேரி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டுள்ளார்.

கென ஓர் தொகுதியைதமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் ஒதுக்கித்தரல் அவசியம்'

மேற்படி பகிரங்கவேண்டுகோள் அகில இலங்கைச் சைவ அனுட்டான பாதுகாப்புச் சபைத் தலைவர் திரு த, சிவலிங்கத்தால் விடுக்கப்பட்டுள்ளது.

— —

குறைகளைதீர்க்க

## தொழிறசாலைகள் நிறுவவேண்டும்

யாழ்ப்பாணம். ஞாயிறு

எமது தொகுதிக்குறைகள் நீண்டகாலமாக நிவர்த்தி செய்யப்படவில்லை. இதில் எவரும் அக்கறைகாட்டவில்லை இக்குறைகளை நீக்குவதற்கு தீவுப்பகுதியில் மீன்பிடித்தொழிற்சாலை, கைத்தொழிற்சாலைகள் முதலியன நிறுவுவதற்கு முயற்சிஎடுக்க வேண்டும். பொருளாதார வசதிபெற்றதும் நமதுகுறைகள் தானுவே நீங்கிவிடும்.

வேலணை கிழக்கு நேதாஜி சன சமூக நிலையத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தீவுப்பகுதி தொகுதியில் போட்டியிடவிருக்கும் வழக்கறிஞர் ப. கதிரவேலு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. ந. தங்கவேலு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இப்பகுதிக்கு பிரசாரக்குழுஒன்றும்தெரிவு செய்யப்பட்டது. திரு. கா. இராமு, ஆ. மாணிக்கராசா இ. கந்தசாமி, ப. கந்தசாமி, மா. க. வைத்தியநாதன், செல்வராசா ஆகியோரும் பேசினர்.

— —

## கிராமசபை ஒப்படைக்கும்

சுழிபுரம், சனி

வட்டுக்கோட்டை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் அனுசரணையுடன் சுழிபுரம் கிராம சபைக்குச் சொந்தமான நான்குதெருக்களைப்பகிரங்க வேலைப் பகுதியினரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை சுழிபுரம் கிராசபை மேற்கொண்டுள்ளது. சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இது சம்பந்தமான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## இன்னிசை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் சங்கீத சபையினரின் ஆதரவில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை இசைமணி திரு வ. செல்லத்துரையின் இன்னிசைக் கச்சேரி பங்கசாலை வீதியிலுள்ள கலைமன்றம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கள் அடைவுபிடித்து வைத்திருந்த ஹனிபா என்பவருக்கு திருமலை நீதவான் திரு. விக்கிரமசேகரா 500 ரூபா அபரதாம் விதித்தார்

### பூங்காவனம்

திருமலை கடற்கரை பிருந்தாவனமாக மாறப்போகின்றது. பெரிய கடை கடற்கரையில் பூங்காவனம் அமைத்து உல்லாசப் பொழுது போக்குவதற்குரியசாதனங்களையும் அமைப்பதென நகரசபைத் தீர்மானித்துள்ளது.

### கிண்ணியா ப. ச. தேர்தல்

கிண்ணியா பட்டினசபையின் பொதுத் தேர்தல் எதிர் வரும் 18ந் திகதி நடைபெறவிருக்கின்றது. இப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் சுதந்திரக்கட்சிக்குமிடையேபலத்த போட்டி இருக்குமென எதிர்பார்க்கப் படுகின்றது.

### நூல்கள் கிடைப்பதில்லையாம்

திருமலை பொது நூலகத்தில் இருக்கும் நூல்கள் அங்கத்துவம் வகிக்காத நகரசபைஊழியர்களுக்கு கொடுக்கப்படுவதினுல் நூலகத்தில் அங்கத்துவம் வகிக்கும் அநேக அங்கத்தவர்களுக்கு பெரும்பாலன நூல்கள் கிடைப்பதில்லையென பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

### 'ஒன்றேகுலம்'

திருமலை அரசாங்க சேவைக் கழகம் அளிக்கும் ''ஒன்றேகுலம்'' என்னும் சமூகசீர்திருத்த நாடகம் மிகவிரைவில் திருமலையில் மேடையேற்றப்படவிருக்கின்றது.

### இந்துவெற்றி

மாணிக்கராசா வைற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் திருமலை இந்துக் கல்லூரியும், தமிழ் சென்யோசப் கல்லூரியும் மோதியது இப்போட்டியில்இந்துக் கல்லூரி எதிர்க் கல்லூரியை 5—0 கோல்களால் தோற்கடித்தது, இவ்வாட்டத்துக்கு திரு. பிரோசைட்டு மத்தியஸ்தம் வகித்தார்.

### ஆசிரியர் இல்லை; மாணவர்கவலை

திருமலை இந்துக் கல்லூரியில் க. பொ. த. உயர்தர. சாதாரண வகுப்புக்களுக்கு விஞ்ஞானபாடம் போதிப்பதற்கு போதிய பட்டதாரி ஆசிரியர்கள் இல்லையென மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

### தாக்கினராம்

படம் பார்த்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் ஒரு கோஷ்டியினரால் தாக்கப்பட்டனராம். இது பற்றி திருகோணமலை பொலிசில்

கள் என இப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அத்தாட்சிப்படுத்த வில்லை என்று அவர் சொன்னுர்.

— —

## 'மாணவர் கடமை'

ஊரதீவு சனி

மாணவர்கள் தங்கள் மனதை ஒருநிலைப்படுத்தி கல்விகற்பதன் மூலமே பரீட்சையில் சித்தியடைய முடியும். அத்தகைய பயிற்சி ஆண்டவனை வழிபடுவதன் மூலம் மாணவர்கள் ஏற்படுத்திக்கொள்ள லாம். மாணவர்கள் மத நம்பிக்கையும் நல்லொழுக்கமும் உள்ளவர்களாக இருந்தால்தான் அவர்களது வாழ்வு வளமானதாக அமையும்''

இவ்வாறு ஊரதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலைத் தலைமைஆசிரியர் திரு. க. சி. தருமலிங்கம் ஊரதீவு பாணுவிடைச் சிவன் ஆலயத்தில் கூட்டுப் பிராத்தனைச்சபை ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

விழாவுக்கு இ. இராமலிங்கசர்மா தலைமைவகித்தார். பொ, வைத்திலிங்கம், செ. முத்துலிங்கம் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்.

— —

## மாணவர்கள் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாங்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவ மாணவிகள் மேற்படி பாடசாலை ஆசிரியர்கள் ஆ. சண்முகரத்தினம், க. பரமநாதன் ஆகியோர் தலைமையில் மூன்று நாட்கள் விவசாய அறிவு பெறும் பொருட்டு சிரமதான முறையில் வயல்களில் இறங்கி களை பிடுங்கினுர்கள். இவர்களின் சேவையை விவசாய இலாகா அதிகாரிகளும் வயல் உரிமையாளர்களும் பெரிதும் பாராட்டினர். இதே போல் சென்ற வருடமும் இவர்கள் இச்சேவையில் ஈடுபட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

— —

## வீதி திருத்தப்படும்

அல்லைப்பிட்டி, சனி

பல வருட காலமாகபோக்குவரத்துக்குப்பயன் படாத முறையில் இருந்துவந்த மண்டைதீவுபாலக்குளிவீதிவெகு விரைவில் திருத்தம் செய்யப்படவுள்ளது. இவ் வீதியைத் திருத்துவதற்கென கிளிநொச்சிஎம். பி கா. பொ. இரத்தினம் உள்ளூராட்சி அமைச்சரோடு தொடர்பு கொண்டு விசேஷ நன்கொடையாக ரூபா 5,000 பெற்றுக்கொடுத்துள்ளதாக தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

யந்திரம் உற்பத்தி செய்கிறதில்லை. அது சக்தியை ஏற்று வேலையைச் செய்கிறது. அதுபோல மனிதனிடத்தில் ஆத்மசக்தி இருக்கிறது. அதிலிருந்து சத்தியம், ஞானம் என்பன ஊற்றெடுக்கின்றன.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 22-ந் திகதி (7-12-69)


## பல்கலைக்கழக மாணவர்

கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகம் நேற்றுடன் மூடப்பட்டிருக்கிறது. இப் பல்கலைக்கழகவகுப்புகளை சுமார் ஆயிரம் மாணவர் பகிஷ்கரித்துவந்தனர் அவர்கள் வன்முறைச் செயல்களில் இறங்கியதால் பல்கலைக்கழகத்தை மூடும்படி பல்கலைக்கழக உபவேந்தர் உத்தரவிட்டதாக ஓர் அறிக்கை கூறுகிறது. வகுப்புக்களைப் பகிஷ்கரித்துவந்த மாணவர்கள் ஐந்துமுக்கியகோரிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தனர். தங்கள் கோரிக்கைகள் தீர்த்துவைக்கப்படாவிடில் தொடர்ந்து வகுப்புகளைப் பகிஷ்கரிக்கப்போவதாக அவர்கள் தெரிவித்திருந்தனர். மாணவர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக பல்கலைக்கழக நிர்வாகமோ, தேசிய உயர் கல்விச்சபையோ, கல்வி அமைச்சரோ எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறியதால் மாணவர் தொடர்ந்து பகிஷ்கரிக்கத் தீர்மானித்தனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்துவருவதும் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருப்பதும் இங்கு இதுதான் முதல் தடவையல்ல, சமீபகாலத்தில் இந்த நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெற்றிருக்கின்றன. இலங்கையில் மட்டும்தான் மாணவர் கிளர்ச்சிகள் நடைபெறவில்லையென்றும் இந்தியாவிலும் இதர பலநாடுகளிலும் இதைவிட மோசமாக மாணவர் கிளர்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றனவென்று சிலர் சொல்லலாம். இது சரியான சமாதானமாகாது. வெளிநாடுகளில் மாணவர்களின் கிளர்ச்சிகள் நடைபெற்ற போதே நமது நாட்டில் பலர் கல்விஅமைச்சரை முன்னெச்சரிக்கைசெய்தனர்.

கல்விஅமைச்சரோ, கல்வி அமைச்சு அதிகாரிகளோ இதுபற்றிக் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. தாம் கல்விஅமைச்சராக வந்தபின்னர்தான் கல்வித்துறையே சிறப்புப்பெற்றிருப்பதாகவும் கல்வித்துறையிலேயே தாம் புதுமை செய்திருப்பதாகவும் இனியும் தமது திட்டம் பிரமாதமாக ஏதோசெய்யவிருக்கிறதென்றும் நாட்டின் பல பகுதிகளிலும் கல்விஅமைச்சர் தம்மைப்பற்றித் தம் பட்டம் அடித்து வருகிறார்.

பல்கலைக்கழக மாணவர் விரக்தியடையவும் வகுப்புக்களைப் பகிஷ்கரிக்கவும் பல்கலைக்கழகங்கள் மூடப்படவும் மூலகாரணமாக அமைந்திருப்பது சகல அதிகாரங்களையும் கல்விஅமைச்சர் தாமே எடுத்துக்கொண்டிருப்பதுதான் என்பதைப் பலரும் சுட்டிக்காட்டியும் கல்விஅமைச்சரோ அரசாங்கமோ இன்னும் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை.

மாணவர்களின்கோரிக்கைகளில் நியாயமில்லாமலில்லை. அதற்காக அவர்கள் வன்முறைச்செயல்களில் ஈடுபடுவது சரியல்ல.

தேசியஉயர்கல்விச்சபை என்ன செய்கிறது? எதற்காக இந்தச்சபை? மாணவர்கள் மத்தியில் அமைதி நிலவவும் பல்கலைக்கழகங்கள்ஒழுங்காக, சீராக நடைபெறவும் கல்விஅமைச்சர் செய்யக்கூடிய ஒரேயொரு நல்ல காரியம் தேசியஉயர்கல்விச்சபையைக் கலைத்துவிட்டு தாமும் அமைச்சர் பதவியைத் துறப்பதுதான். அமைச்சர் பதவியை துறப்பது என்பதுதான் நமது நாட்டில் அபூர்வமான விஷயமாச்சே!

## கலைத் தெய்வத்திற்கு

# உயர்கல்வி ஆணைக்குழு சாதிக்கப்போவது என்ன

கல்வி கலாச்சார அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை தற்போது உயர்கல்வி ஆணைக்குழுவொன்றை அதாவது பல்கலைக்கழக ஆணைக்குழு வென்ற பெயரில் நியமிக்கிறார். எமது பல்கலைக்கழகங்களின் தற்போதைய நிலைமைகளைக் குறித்து இந்த ஆணைக்குழு என்ன செய்யப்போகிறது?

### குழுக்களும் சபைகளும்

உயர் கல்வி சம்பந்தமாகக் கடந்த நான்கு வருடங்களிலும் பல ஆணைக்குழுக்களையும், சபைகளையும் அமைச்சு நியமிக்கத் தவறவில்லை. இவைகள் நியமிக்கப்பட்டிருந்தும் பல்கலைக்கழக நிர்வாகத்தைப் பொறுத்தளவில் எத்தனையோ தவறுகள் ஏற்பட்டுள்ளன. கல்வியைப் பொறுத்தளவில் கல்வி கலாச்சார அமைச்சர் தன் விருப்பத்திற்கிணங்கவே நடந்திருக்கிறார். இன்றும் நடந்து வருகிறார்.

கள் விண்ணப்பிக்காத காரணத்தினால் தற்போது பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களுக்கான 200 வெற்றிடங்கள் நிரப்பப்படாதுள்ளன. இதனால் பல்கலைக்கழகங்களின் போதனையும் ஆராய்ச்சிக் கல்வியும் வெகு துரிதமாகப் பின்நோக்கிச் செல்கின்றனவென்பது எவராலும் மறுக்க முடியாததொன்று.

### புதிய குழு

எமது நாட்டின் இன்றைய கல்விநிலை இந்த அழகில் தான் இருக்கின்றது. இந்த வேளையில் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ள புதிய ஆணைக்குழு என்ன செய்யப்போகிறது. மேற்குறிப்பிட்ட தவறுகள் யாவற்றையும் பூசி மெழுகுவதைத் தவிர வேறு ஒன்றும் இக்குழு செய்யப்போவதில்லை. இன்றைய நிலையில் வேண்டுவது என்னவெனில் பல்கலைக்கழகங்களில் விடப்பட்ட தவறுகளை பரிசிலனை

### உயர் கல்விச்சபை

அடுத்துத் தேசிய உயர் கல்விச்சபையை நோக்குமிடத்து உயர்கல்விக்கு உறுதுணையாக இருக்கவேண்டிய இச்சபை உயர்கல்விக்கு முட்டுக்கட்டையாகவே அமைந்துள்ளது. இச்சபை மேல் ஒரு பல்கலைக்கழகம் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தது யாவரும் அறிந்ததே. பல்கலைக்கழகங்களுக்கும்கல்வியமைச்சுக்குமிடையில் நின்று அமைச்சருக்குத் தகுந்த முறையில் ஆலோசனை கூற வேண்டிய பொறுப்பை இச்சபை செய்யத்தவறிவிட்டது. நாட்டின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் இச்சபையை நீக்கவேண்டும் என்று கோரப்படுகிறது.

### வேலையில்லாப் பிரச்னை

மேலும் இவ்வுயர் கல்வி ஆலோசனைக்குழு கவனிக்க வேண்டிய மற்றொரு விடயம் படித்துப் பட்டம் பெற்ற மாணவர்களின்

# பல்கலைக்கழக பிரச்னைகளுக்கு மந்திரிசபையே தீர்வுகாணவேண்டும்

### கலவரங்களுக்கு காரணம்

பல்கலைக்கழகங்களில் இன்றுஏற்பட்டுள்ள இடநெருக்கடி, தகுதி வாய்ந்த ஆசிரியர் பற்றாக்குறை, உபகரணங்கள், தளபாடங்கள் பற்றாக்குறை மாணவர் அமைதியின்மை போன்ற பல்வேறு பிரச்னைகளுக்குத் தீர்வு காணத் தாமதம் ஏற்படுவதினாலேயே கலவரங்களும் குழப்பங்களும் பல்கலைக்கழகங்களில் இன்று காணக்கூடிய பிரதான அம்சங்களாகவுள்ளன.

பட்டதாரி மாணவர்கள் நாட்டின் வருங்காலத் தலைவர்கள் அல்லவா? அவர்கள் பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்ள வேண்டும். பல்கலைக்கழகங்கள் போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் தங்கள் செயல்களின் பிரதிபலிப்பை நினைத்துப் பார்க்காது காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொள்வார்களானால் இத்தகைய நிலையங்களில் உருவாகவேண்டிய கூட்டு

செய்வதற்கும், குறிப்பாக உயர் கல்விச் சட்டம், தேசிய உயர்கல்விச் சபை படிப்பு முடிந்ததும் மாணவர்களின் வேலையில்லாப் பிரச்னை ஆகிய மூன்றையும் ஆராய்வதற்கும் மந்திரிசபை உபகுழுவே அவசிய தேவையாகும்.

### உயர் கல்வி மசோதா

கல்வியமைச்சரின் உயர் கல்வி மசோதாவை மாணவர் தொடக்கம் பொதுமக்கள் வரை கண்டிக்காதவர்கள் எவருமில்லை. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இம்மசோதாவை வெகுவாகக் கண்டித்துள்ளார்கள் பல்கலைக்கழகம் நாட்டில் நிறுவப்பட்ட அன்று தொட்டு இருந்துவந்த வழமைகளைக் கல்வியமைச்சர் குழிதோண்டிப் புதைத்துள்ளார் பல்கலைக்கழகங்களுக்கு உபவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தைத்தானே பெற்றுள்ளார் [illegible] வெளிப்படை

வேலையில்லாம் பிரச்னையாகும். இதை நன்கு ஆராய்ந்து அவர்களுக்கு நன்மை பயக்கத்தக்க வகையில் நடவடிக்கையெடுக்கவேண்டும். மாணவர்களையும் ஏற்கனவே கவனித்து வேலைவாய்ப்புப் பெறத்தக்கவகையில் அவர்களின் கல்வித்துறையைத் திருப்பத்தக்கவகையில் ஆலோசனை கூற வேண்டும். இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு முன்னேற்ற நாடுகள் என்ன வழிவகைகளைச் செய்கின்றன என்பதை இக்குழு ஆராய்ந்து அதை நம்நாட்டிலும் பின்பற்றவேண்டும். அப்படிச் செய்யின் நற்பலனை அடையலாம்.

### மந்திரிசபையின் கடமை

இத்தகைய பல்வேறு பிரச்னைகளுக்கும் தீர்வுகாண்பதற்கு மந்திரிசபையே முன்வரவேண்டும். பல்கலைக்கழகங்களின் பிரச்னைகளை நுணுக்கமாக விரிவாக ஆராய்வது இன்று மந்திரிசபையின் முதல் முக்கிய கடமையாகவுள்ளது. மந்திரிசபை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சிமாவட்ட

## இணைப்புக்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப் படும்

மானிப்பாய், சனி

மானிப்பாய் பட்டின சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த மாதம் 29ம் திகதி நடைபெற்றது. இக் கூட்டத்தில் இம் மாதம்17ம் திகதி நடைபெற விருக்கும் யாழ் பிரதேச உள்ளூராட்சி மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில்விவாதிப்பதற்கு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வருடாவருடம் பட்டின சபைகளின் கணக்கை கணக்காளர் கணக்கெடுக்க வேண்டும், லண்டன் பரீட்சைகளைத் திரும்பக் கொண்டுவர வேண்டும், பட்டின சபை எழுதிய கடிதங்களுக்கு மேலதிகாரிகள் தாமதமின்றி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும், மானிப்பாய் பட்டினசபை மண்டபத்தைக் கட்டி முடிப்பதற்கு நிதி வசதி செய்ய வேண்டுமென்பன போன்ற தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன இணைப்புக்குழுக் கூட்டத்தில் விவாதிக்கச் சேர்க்கும்படி இத்தீர்மானங்கள் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## புதிய வரிகள் அறவிட யோசனை

சுழிபுரம், சனி

சுழிபுரம் கிராம சபைக்கு மேலும் பல புதிய வரிகள் மூலம் பணம் அறவிடப்பட ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன.

கள்ளுக்கடைவரி வசூல்சம்பந்தமான விடயமும் மேலிடத்தின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை பற்றி ஆலோசனை செய்வதற்கு முன்னதாகவே இத்தீர்மானங்கள் செய்யப்பட்டன வாகன வரிகள் மாற்றம் செய்யப்படவேண்டும் என பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

## பரிபாலகர்கள்

ஊர்காவற்றுறை, சனி

சரவணை- தேவபுரம்' ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி பரிபாலன சபையின் வருடாந்தக்கூட்டம் நடைபெற்ற போது வரவு-செலவு அங்கிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு சி செல்லத்துரை, காரியதரிசி: திரு செ

# நாட்டிலும் நகரிலும்

1941-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏழாம் திகதி இரண்டாவது உலக மகா யுத்தத்தில் மறக்கமுடியாத அதிர்ச்சி தந்த நாள், அன்றுதான் ஜப்பானிய கடற்படையும் விமானப்படையும் பசுபிக் சமுத்திரத்திலிருந்த பிரமாண்டமான அமெரிக்க கப்பற்படையை தாக்கி ஜப்பானை அமெரிக்காவோடு நேரடி யுத்தத்தில் இறக்கின.

ஆறுவருடங்களாக நடந்த உலக யுத்தத்தின்போது துணிச்சலுக்கும் தைரியத்துக்கும் வீரத்துக்கும் பேர்போன பல சண்டைகள் நடந்தன. லண்டன் மீது ஹிட்லர் நடத்திய விமானப் போர். ஸ்டாலின்கிராப் சண்டை, டன்கேர்க், ஆபிரிக்க படையெடுப்பு, சஹாராப் போர் இவையெல்லாவற்றையும் தூக்கியடித்தது ஜப்பானியரின் பேர்ள் துறைமுகத் தாக்குதல்.

ஜப்பான் ஓர் அழகான நாடென்றாலும் நிலவளம் குறைந்தது. கைத்தொழில்களுக்குப் போதுமான மூலப்பொருட்கள் கிடையாது. அத்துடன் பெருகிவரும் ஜனத்தொகையையும் சமாளிக்க வழியின்றி ஜப்பான் தவித்தது. கொரியாவையும் மஞ்சூரியாவையும் சீனாவையும் தாக்கி ஒரு பலனும் கிடைக்கவில்லை. பெற்றோலும் ரப்பரும் ஈயமும் அலுமினியமும் விளைகின்ற தென்கிழக்காசிய நாடுகளைக் கைப்பற்றினால்தான் தானும் ஒரு சாம்ராஜ்யத்தை அமைக்கலாம் என்று ஜப்பான் கனவு கண்டது, இந்த லட்சியத்துக்கு இடையூறாக நின்றது பசுபிக்கில் தளம்கொண்டிருந்த அமெரிக்க கப்பற்படை. அதை அகற்றினால்தான் பிலிப்பைன் தீவுகளையும் மலேசியாவையும் இந்தோனேசியாவையும் பிடிக்கலாம்.

அமெரிக்கா அச்சமயத்தில் பிரிட்டனுக்கு உதவியாக ஐரோப்பிய யுத்தத்தில் தலையிட்டுவிட்டது. ஆயினும் ஹாவாய் தீவிலுள்ள பேர்ள் துறைமுகத்தில் வலிமை பொருந்திய பெரும் கப்பற்படையொன்றை வைத்திருந்தது. நூற்றுக்கணக்கான விமானங்கள் அடங்கிய பிரமாண்டமான விமானந்தாங்கிக் கப்பல்களும், நாசகாரிகளும், நீர்மூழ்கிகளும் வேறு பலவகைப்பட்ட யுத்தக்கப்பல்களும் அங்கே நங்கூரம் பாய்ச்சி நின்றன.

த்திருந்தபோதிலும், நேரடியாக இருநாடுகளும் போர் தொடுக்கவில்லை. ஆதலால் ஜப்பான் இப்படி ஒரு துணிகரமான தாக்குதலை நடத்துமென்று அமெரிக்கா கனவிலும் சிந்திக்கவில்லை. மேலும் ஜப்பானிய கடற்படை அவ்வளவு பலமுள்ளதல்ல என்றே அமெரிக்கா நினைத்தது.

யாமாமோட்டோவின் திட்டம் கடைசிவரை மூடுமந்திரமாகவே இருந்தது அமெரிக்க ஒற்றர்களால் அதைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. நவம்பர் 26-ம் திகதி ஜப்பானின் பல்வேறு துறைமுகங்களிலிருந்தும்கப்பல்கள் புறப்பட்டுச் சென்றதை பல ஜப்பானியரே அறியமாட்டார்கள். ஆறு விமானந்தாங்கி மேலும் இரண்டு யுத்தக் கப்பல்களும் மூன்று குறாய்சர்களும் மூன்று நீர்மூழ்கிகளும் ஒன்பதுநாசகாரிகளும் எட்டு எண்ணைக் கப்பல்களுமாக முப்பத்தொரு கப்பல்கள் பசுபிக் சமுத்திரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒன்று கூடின.

உலகிலேயே மிகப் பெரிய கப்பற்படை திரண்டபின்பு விசாலமாகப் பரந்து கிடந்த பசுபிக் சமுத்திரத்தைக் கிழித்துக் கொண்டு ஹாவாய் தீவிலுள்ள பேர்ள் துறைமுகத்தை நோக்கிப் புறப்பட்டன. 3500 மைல்கள் போகும்வரை கப்பல்கள் ஒன்றோடொன்று ரேடியோ மூல பேசிக்கொள்வதும் நிறுத்திக்கொள்ளப்பட்டிருந்தது அமெரிக்க கப்பல்களோ விமானங்களோ நீர்மூழ்கிகளோ எதுவும் எதிர்ப்படவில்லை. டிசம்பர் மாதம் ஏழாம் திகதி அதிகாலை ஏழு மணிக்கு பொறுக்கி எடுத்த திறம் ஜப்பானிய விமானிகள முந்நூறு விமானங்களில் பறந்து சென்று குண்டுகளையும் டோப்பியோக்களையும் அமெரிக்க கப்பல்கள்மீது சோனாவாரியாகப் பொழிந்து நூற்றுக்கணக்கான கலங்களை நாசமாககும் வரை எவருககும் என்ன நடந்ததென்று தெரியாது

இம்மாபெருந் தாககுதலை தொடர்ந்து ஜப்பானிய சேனைகள் தென்கிழககாசியாமுழுவதையும் சூறையாடி இலங்கையையும் எட்டிப்பார்த்தது சரித்திரமறிந்தவிஷயம்

வழிப்போக்கன்

போதே நமது நாட்டில் விஷயமாச்சே! பலர் கல்வி அமைச்சரை முன்னெச்சரிக்கைசெய்தனர்.

# கலைத் தெய்வத்திற்கு தங்கப்பதக்கம் சூட்டினர்

கடந்த சில மாதங்களுக்கு முன் அகில இலங்கை காந்தி நூற்ருண்டு விழாக்குழுவினர் நடாத்தியகாந்தி புகழ்க் கவிதைப் போட்டியில் முதற்பரிசாகக் கிடைத்த தொகையை தான் பூஜித்துவரும் சரஸ்வதி அம்பாளுக்குத் தங்கப் பதக்கமாக ஆக்கி அம்பாளுக்கு கவிஞர் ஐயாத்துரை அணிவித்த விழா இம்மாதம்திங்கட்கிழமை மாலை அரியாலை கலைமகள் ஆலயத்தில் நடைபெற்றது.

தொல்பொருட் காட்சிச்சாலை உப பாதுகாவலர் ம.பொ.செல்வரத்தினம்தங்கப்பதக்கத்துடன் கூடிய மாலையை வழங்க கவிஞர் ஐயாத்துரையின் சகோதரன் திரு வே. நடராஜா அம்பாளுக்கு சூட்டினுர்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற இசையரங்கில் யாழ் நாடகக் கலாமன்றத்தின் அங்கத்தினரான திரு மு. திருநாவுக்கரசு கலைமகள் பாடல்களைப் பாடினுர். திரு ஐயாத்துரை பரிசு பெறக் காரணமான 'நாதம் எழுந்திடும் நாமஞ் சொன்னுல்' என்ற பாடலை ஆசிரியர் திரு வே. க. பாலசிங்கம் பாடினுர். இசைக்கலைஞருக்கு இசைவாக திரு த. பூபாலசிங்கம் மிருதங்கம் வாசித்தார். யாழ் நாடகக் கலாமன்றச் செயலாளர் திரு வி. சி. குஞ்சிதபாதத்தின் வரவேற்புரையை அடுத்து கவிஞர் வி. கந்தவனம் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் இ. நாகராஜன், கல்வயல் வே. குமாரசாமி, அல்வாயூர் செ விவேகானந்தன், அரியாலையூர் வே: ஐயாத்துரை நவாலியூர்க் கவிராயர் த: பரமலிங்கம் த தணிகாசலம் ஆசிரியர் ஆகியோர் பங்குபற்றினர்.

நாடகக் கலாமணி திரு வி. ஸி பரமானந்தம் தலைமையில் உரையரங்கு நடைபெற்றது. தலைவர் தனது தலைமையுரையில் குறிப்பிட்டவை வருமாறு:

இன்றைய உலகம் அழிவுப்பாதையின் விளிம்பில் நிற்கின்றது. இந்த அழிவினின்றும் உலகம் காப்பாற்றப்பட வேண்டுமாகில் மனித சமுதாயத்தில ஆன்மீகப்பற்று வளரவேண்டும்- எதிர்காலப் பிரஜைகளாக விளங்கும் சிறுவர் இதயங்களிலே ஆத்மீகக் கருத்துக்கள் விதைக்கப்படவேண்டும். இந்தத் தேவையைவிஞ்ஞான மேதைகள்கூட இன்று உணர்ந்துள்ளனர்:

யாழ் மாநகரசபைஉறுப்பினர் ஏ. விசுவநாதன் பேசுகையில் கடவுளையாம் ஒவ்வொருமனிதனிடமும் காணவிழையவேண்டும், மனிதனை மனிதன் மதித்து வணங்குகின்ற அடக்கம் பொறை, அன்பு ஆதிய பண்புகள் தான் இந்தக் கடவுளின் வழியைக்காட்ட முடியும் என்ருர்-

திரு ம- பொ, செல்வரத்தினம் தமது பாராட்டுரையில் இந்தியாவிலே கூத்தனூரில் சரஸ்வதிக்கு ஒரே ஒருகோயில்தான் உண்டு- கலைஞானம் வேண்டிய ஐயாத்துரையின் தந்தையார் திரு க வேலுப்பிள்ளை யாழ்ப்பாணத்தில் முதன்முதலாகச் சரஸ்வதிக்குத் தனிக் கோயிலை ஸ்தாபித்தார். அவர்வழி நின்று செயலாற்றும் கவிஞர் திரு- வே- ஐயாத்துரை சக்தியின் அருள் பெற்று முதற்பரிசையும் கவர்ந்ததில் வியப்பொன்றுமில்லை- இவ் வைபவம் நாட்டின் கலாச்சாரத்தில் ஒரு பொன்னுள் என்ருர்-

கவிஞர் தாம் பெற்ற பரிசுப் பணத்தை தங்கமாலையாக்கிச் சாஸ்வதிக்குச் சூட்டியதை நினைக்கும்போது சிவபிரான்மீது அபரிமிதமான பகதி கொண்டு கலைக் கோயில்களை கட்டியதோடு பொன்னுலும் நவரத்தினங்களாலும் மலர்கள் செய்வித்து சிவன் பாதத்திலே தூவி சிரசை வைத்து வணங்கிப் பெருமைகொண்ட உத்தமசோழன் சிவபாதசேகரனின் பக்தி மேம்பாட்டினை இங்கு நினைவு கூரவேண்டியிருக்கிறதென்று அவர்சொன்னுர்.

இன்று யாழ் மாநகரசபை கலைமகள்வட்டார உறுப்பினர் திரு நா மார்க்கண்டுதிரு இ வி செல்வரத்தினம் ஆசிரியர் பண்டிதர் இரா சிவசுப்பிரமணியம் திரு சி: குலத்துங்கம் ஆசிரியர் திரு த. கனகரத்தினம், செல்வன் க. தங்கராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

— அன்பன்

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

...களின் பிரதிபலிப்பை நினைத்துப் பார்க்காது காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொள் வார்களானுல் இத்தகைய நிலையங்களில் உருவாகவேண்டிய கூட்டுறவு மனப்பான்மை, ஒத்துழைப்பு, சேவை மனப்பான்மை போன்ற நாட்டிற்கும் வீட்டிற்கும் தேவையான நல்ல அம்சங்கள் ஏற்படுவது எங்ஙனம்?

**கல்வித் தரம் குறைய காரணம்**

இன்று உயர் கல்வி முன்னேற்றத்துக்கு உறுதுணையாக நின்று உதவவேண்டியவர்கள் நம்மத்தியிலில்லை. தகுந்த தகுதி வாய்ந்தவர்...ளார் பல்கலைக்கழகங்களுக்கு உபவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தைத்தானே பெற்றுள்ளதால் அரசியலை அங்கு புகுத்துகிருர் என்பது வெளிப்படை

இப்பொழுது நியமிக்கப்பட்டுள்ள கல்வி ஆணைக்குழு மேற்படி மசோதாவை நன்கு பரிசீலனை செய்து கெடுதல்விளைவிக்கும் அம்சங்களை அதில் இருந்து உடனடியாக நீக்கிவிடவேண்டும்.

...பற்கு மந்திரிசபையே முன்வரவேண்டும். பல்கலைக்கழகங்களின் பிரச்னைகளை நுணுக்கமாக விரிவாக ஆராய்வதே இன்று மந்திரிசபையின் முதல் முக்கி...கடமையாகவுள்ளது. மந்திரிசபையின் தலையீட்டினுலன்றி குழுக்களாலும் சபைகளாலும் மேற்படி பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவியலாது

—குணம்

## மறைந்த முருகேசு கதிர்காமு

கரணவாயைத் தாயகமாகக்கொண்ட பிரபல கொன்ருக்டர் திரு. முருகேசு கதிர்காமு இம்மாதம் 1-ம் திகதி மாலை தமது 52-ம் வயதில் இயற்கை எய்திஞர்.

இளம் பருவத்திலேயே புரட்சி மனப்பான்மையும், நேர்மை தவருத பண்பும் அஞ்சா நெஞ்சமும்படைத்த திரு. கதிர்காமு சில ஆண்டுகள் பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றிய பின்னர், தமது கொள்கையைக் கைவிட முடியாது, பதவியை உதறித் தள்ளிவிட்டு, 1947-ம் ஆண்டு தொடக்கம் இடதுசாரிச் சக்திகளுடன் இணைந்து பலவித சமூகப் பணிகளில் ஈடுபட்டார்.

பல ஆண்டுகளாகக் கட்டைவேலிக் கிராமச் சபையிலும், அதன்பின் நெல்லியடிப்பட்டின சபையிலும், உறுப்பினராகப் பதவி வகித்த திரு. கதிர்காமு தமது வட்டார மக்களுக்கும் பிறருக்கும் உத்தியோக தோரணையில் மட்டுமன்றி தனிப்பட்டமுறையிலும் பல பொதுப்பணிகள் ஆற்றினுர். 1956-ம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களிருலிந்து முதல் இடதுசாரிப் பாராளுமன்ற உறுப்பினராக திரு. பொன் கந்தையாவைத் தெரிவுசெய்வதற்கு மகத்தான பணிபுரிந்தார்.

தமது இலட்சிய நாடாகிய சோவித் யூனியனுக்கு விஜயம் செய்வதைத் தமது வாழ்வின் மிக உயர்ந்த குறிக்கோளாகக் கொண்ட திரு. கதிர்காமு மிகவிரைவில் அந்நாட்டுக்குச் செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தார். எனினும் அவரது ஆசை நிறைவேருமலே இவ்வுலகை நீத்தார்.

அவரது ஆத்மா சாந்தி அடைக.

—வ. மகாலிங்கம்.

# ஏழை மாணவருக்கு உதவிய அதிபர்



''ஆசிரியப்பணிஅறப்பணி அதற்கே உன்னைஅர்ப்பணி'' என்ற பொன் மொழியை தன் மன மொழியாகக் கொண்டு முப்பத்தொரு ஆண்டுகள் அயராது அரும்பணிஆற்றி தம்சேவையிலிருந்து 21—11 69 லிருந்து ஓய்வு பெற்ருர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதிபர் திரு. செ. சிவகுருநாதபிள்ளை அவர்கள்.

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணநாவலரால் ஸ்தாபிக்கப்பட்ட சைவ ஆங்கில வித்தியாசாலையிலேயே ஆரம்பம் முதல் ஆசிரியராக ஏழுஆண்டுகளாகவும், அதிபராக 24 ஆண்டுகளும் கடமையாற்றினுர். சைவஆங்கில வித்தியாசாலையாக விளங்கிய பாடசாலை இவர் காலத்தில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியாகப் பரிணமித்தது. வட்டுக்கோட்டை வாழ் இந்துப் பிள்ளைகள் பயில்வதற்குதக்கதோர் கல்லூரி இல்லையே என்று எண்ணிய பெற்ருேர்க்கு ஒரு மாபெரும் வரப்பிரசாதமாக இக்கல்லூரியை ஆக்கித்தந்தார் இவர்.

மாணவர்கள் விஞ்ஞான அறிவுபெற ஒரு விஞ்ஞான ஆய்வுகூடம் அமைப்பதற்கும் பாடசாலையின் தரமும் வளமும் மென்மேலும் விருத்திபெற ஒரு மேல்மாடிக் கட்டிடம் அமைப்பதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உழைத்து, திரு. இராஜசுந்தரம்தம்பதிகளின் அன்பளிப்பாக 'செல்வலக்ஷ்மி' விஞ்ஞான கூடத்தினையும், முதலியார் குமாரசாமி தம்பதிகளின் அன்பளிப்பாக 'வள்ளியம்மை மண்டபத்தினை'யும் பெற்றுத்தந்தார்.

பாடசாலை மாணவ மாணவிகளை 'மகனே' என்றும் 'அம்மா-பிள்ளாய்' என்றும் அழைக்கும் இவர் குரலில் ஒரு தந்தையின் பாசக்குரலை காணமுடியுமே யன்றி ஒரு அதிபரின் கண்டிப்பைக்காண முடியாது.

ஏழை மாணவர்கள் கல்லூரியில் உயர்கல்வி பெறுவதற்காக எண்ணற்ற மாணவர்களைத் தாமே இந்து மகாசபையினரிடம் சிபாரிசு செய்து அன்னுருக்கு இலவசக் கல்வியை வழங்கினுர்.

மாணவர்கள் பல துறைகளிலும் பயிற்சியும் திறமையும் பெற பல பல இயக்கங்களையும். கழகங்களையும் பாடசாலையில் ஸ்தாபித்தளித்தார். விஞ்ஞானக் கழகம், சமூக இயற்கழகம், சைவ மங்கையர் கழகம், சைவஇளைஞர்சங்கம், இளம் விவசாயிகள் கழகம், சாரணசாரணிகள் இயக்கம், சீனியர் பார்லிமெண்ட் போன்ற குறிப்பிடக்கூடிய சிறந்த பெரிய இயக்கங்களை ஆக்கி மாணவர்களை பல்கலை வல்லுனர்களாகப் பயிற்றுவித்தார்

இவருடைய நீண்ட நிழலில் வளர்ந்து பயின்ற ஆயிரமாயிரம் மாணவ மாணவியர் இன்று பற்பல துறைகளிலும் சிறப்புற்று விளங்குகின்றனர்.

தந்தையாய் சற்குருவாய் விளங்கி இன்று ஓய்வுபெறும் அதிபர் நீண்ட ஆயுளையும் திரண்ட புகழினையும்பெற்று மென்மேலும் மக்களுக்கு பலதொண்டுகளாற்ற இறைவன் அருள் புரிவாளுக.

—செல்வி குணதேவி

...போது வரவு-செலவு அங்கிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு சி செல்லத்துரை, காரியதரிசி: திரு செ சுப்பிரமணியம், தனாதிகாரி: திரு நா விசுவலிங்கம், பஞ்சாயத்து அங்கத்தவர்களாக திருமதி கண்மணி சதாசிவம், திரு சு இ சீனிவாசகம், திரு கு குழந்தைவேலு (நிர்வாகஸ்தர்), திரு இ நடனசபாபதி, திரு நா விசுவலிங்கம் கணக்குப்பரிசோதகர், திரு பி சுப்பிரமணியம் (ஆசிரியர்).

## இன்று இறுதிச் சடங்கு

கோட்டை, ஞாயிறு

இரத்தினபுரி எம். பி. திரு. தனபால அட்டிகலையின் இறுதிக்கிரியைகள் இன்று இரத்தினபுரியில் நடைபெறும்.

திரு. தனபாலாவின் சடலம் இரத்தினபுரி நகரமண்டபத்தில் நேற்று பொது மக்களின் இறுதிமரியாதைக்காக வைக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

...விமானங்கள் அடங்கிய பிரமாண்டமான விமானந்தாங்கிக் கப்பல்களும், நாசகாரிகளும், நீர்மூழ்கிகளும் வேறு பலவகைப்பட்ட. யுத்தக்கப்பல்களும் அங்கே நங்கூரம் பாய்ச்சி நின்றன. இந்தப் பெரிய படையை நிர்மூலம் செய்துவிட்டால் அமெரிக்காவின் கையை ஒடித்துவிடலாம் என்று ஜப்பான் நினைத்தது.

துணிச்சல்மிக்க இந்தத் தாக்குதலுக்கு திட்டமிட்டு யூகம்வகுத்தவர் ஜப்பானிய கடற்படை, விமானப்படைகளின் கூட்டு அதிபதியாகிய அட்மிறல் யாமாமோட்டோ என்பவர். 1941-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே இந்த யோசனை அவருடைய மூளையில் கருக்கொள்ள ஆரம்பித்துவிட்டது நம்பிக்கையான இரண்டொரு தளபதிகளுக்கு தமது திட்டத்தை விபரித்தார். அதைப்போல ஓர்மம்மிக்க சதி ஆலோசனை ஒருபோதும் நடைபெறவில்லை.

ஜேர்மனியோடு உடன்படிக்கை செய்துகொண்டிருந்தபடியால் ஜப்பானுக்கு பெற்ருேல் முதலிய பொருட்களை ஏற்றுமதி செய்வதில்லையென்று அமெரிக்கா ஏற்கனவே ஜப்பான் மீது பொருளாதாரத்தடை விதி...

...சேனைகள் தென்கிழககாசியாமுழுவதையும் சூறையாடி இலங்கையையும் எட்டிப்பார்த்தது சரித்திரமறிந்தவிஷயம்'

வழிப்போக்கன்

## அனலைதீவில் பெற்ருேர் தின விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய பெற்ருேர் தினவிழா இன்று மாலை அனலைதீவில் நடைபெறவிருக்கிறது. வடமாநில கல்வி அதிபதி திரு. சி தணிகாசலத்தின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுகிருர். வட்டாரக் கல்வி அதிகாரி திரு.ஏ. எஸ். நல்லையாவும் கலந்து கொண்டு பேசுவார்.

''அறத்தின் சுவடுகள்'' 'எமிலிசோலா' ஆகிய நாடகங்களும், இசை, சதம்ப நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

# பாடசாலை வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர்

திரு. சிவகுருநாதபிள்ளை வட்டு இந்து அதிபராக பொறுப் பேற்கும்பொழுது ஓர் பழைய கட்டடமும் நான்கு வகுப்பறைகளும் தான் இருந்தன. கல்லூரியின் அவலநிலையையுணர்ந்த பெருந்தகையுள்ளம் படைத்த இரு தம்பதிகள் என்ஞான்றும் நிலைத்திருக்கத் தக்கதாக இரு கட்டிடங்களை நன்கொடையாக ஈந்தனர். முதலியார் ச. குமாரசுவாமி அவர்களும் பாரியாரும் வள்ளியம்மை மண்டபம் மேல் மாடியிலமைத்துள்ள கல்லூரியின் பிரதான கட்டிடத்தையும் திரு தி இராசசுந்தரமும் அவருடைய பாரியாரும் செல்வலட்சுமி ரசாயன ஆய்வுகூடத்தையுமளித்தனர். யாழ்ப்பாண இந்துக் கல்லூரியையும் அதனுடன் இணைந்த பாடசாலைகளையும் பரிபாலித்துவந்த முகாமைச் சபையின் உதவியுடன் திரு. சிவகுருநாதபிள்ளை அவர்கள் சிக்கனமான முறைகளைக் கையாண்டு பல வகுப்பறைகளைக் கட்டிமுடித்தார்.

ஒருசில அதிபர்களே தமது உதவியாசிரியர்களின் பூரண ஒத்துழைப்பையும் மாணவரின் விசுவாசத்தையும் பெற்றுக்கொள்கின்றனர். இவ் விடயத்தில் திரு. சிவகுருநாதபிள்ளை அவர்கள் மிகவும் நற்பாக்கியசாலியாக விளங்கினுர். நிர்வாகத் திறமையுடன் புத்திசாதுரியமும் ஆசிரியர்களின் பிரச்னைகளில் காட்டிய கரிசனையும், தயாளகுணமும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப்பெற்றுக்கொள்ளக்கூடிய ஆற்றலும் அவருடைய பரிபாலனத்தை சிறப்புறச்செய்தன. உண்மையான கடவுள் பக்தியுடையவராக வாழ்கின்ற இப்பெரியாரின் செயலனைத்தும் சமய நெறியின் அடிப்படையில் எழுந்த பிரதிபலிப்பே.

அதிபர் பதவியின்பொறுப்புகளுடன் திரு. சிவகுருநாதபிள்ளை அவர்கள் சமய சமூகப் பணிகளிலும் தமது நேரத்தைச் செலவு செய்துள்ளார். வட்டுக்கோட்டைப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், முருகமூர்த்தி ஆலயத்திருப்பணிச் சபையின் தலைவராகவும், அடைக்கலந்தோட்டக் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபையின் உபதலைவராகவும் அரும்பணியாற்றி வருகின்ருர். மேலும் தொடர்ந்து இவர் அரியதொண்டுகளை ஆற்றுவதற்குப் பல்லாண்டுகாலம் வாழவேண்டுமென்று பிரார்த்திக்கின்ருேம்.

—எஸ், மகேசன்
(ஆசிரியர் வட்டு. இந்து

## தமிழ்நாட்டு சுற்றுலா

மாவிட்டபுரம், சனி

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும் இம் மாதம் 7ம் திகதி கலை, கலாச்சார சுற்றுலா ஒன்றை மேற்கொள்ள இருக்கின்றனர்

இவர் தமிழ்நாட்டிலுள்ள கலை, கலாச்சார நிலையங்களையும், பல ஸ்தலங்களையும் மற்றும்நிர்மாணவேலை திட்டங்களையும் பார்வையிட ஒரு மாத சுற்றுலாவை மேற்கொள்ள இருக்கின்றனர்

இச்சுற்றுலாக்குழு பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இசையாசிரியர் திரு. பொன். முத்துக்குமாரு தலைமையில் செல்ல இருக்கின்றது.

## வீதி திருத்தம்

ஊரதீவு, சனி

தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினம் அவர்களின் வேண்டுகோளின் பேரில் நயினதீவு மேற்குக் கடற்கரை வீதியைச் செப்பனிட பொதுமராமத்து இலாகா முன்வந்துள்ளது.

வீதி செப்பனிடுவதற்கு முன்னேடியாக வீதியைச் செப்பனிடுவதற்குரிய செலவு மதிப்பீட்டை மராமத்து இலாகா கோரியுள்ளது. தார்போடும் வேலை விரைவில் ஆரம்பிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org